# நெல்லியடியில் சில இளைஞர்கள் கைது


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 233
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 16 றஜபு 30 வெள்ளிக்கிழமை (2-10-70)



★ யுனிக்
★ நாஷனல்
★ சன்யோ
★ சொனி
ஆகிய றேடியோக்கள்
நிதான விலைகளில் கிடைக்கும்
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.



சரஸ்வதி பூஜையை
முன்னிட்டு
தூய்மையான - கலப்பற்ற
சர்க்கரை
சுத்தமான - கல்லில்லாத
அவல்
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. வைத்திலிங்கம் & கோ.
45, கே.கே.எஸ். றேட், - யாழ்ப்பாணம்.
போன்: 663


## விசாரணையின் பின் பிணையில் விடுதலை

### பீகிங் கம்யூனிஸ்ட் அலுவலகமும் சோதனை

யாழ்ப்பாணம், வெள்ளி 'சேகுவேரா' இயக்கத்தினர் என்ற சந்தேகத்தின் மீது நேற்றிரவு நெல்லியடிச் சந்திக்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டில் சிலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் ஒரு கூட்டம் நடத்திக்கொண்டிருந்ததாகவும், துண்டுப்பிரசுரங்கள் சில கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்களைப் பொலிசார் விசாரணை செய்ததிலிருந்து அவர்கள் சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்களல்லவென்றும் இரண்டு தினங்களின் பின் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டம் பற்றி ஆலோசனை செய்வதற்காக சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களே அவர்களென்றும் தெரிய வந்ததாம். இதைத்தொடர்ந்து கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்களென்றும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். செந்திவேல், சிவஞானசுந்தரம், குமாரசாமி, சிவராஜா, பாலச்சந்திரன் ஆகிய ஐவருமே கைதுசெய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டவர்களாகும்.

சேகுவேரா இயக்கத்தினர் அந்தரங்கக் கூட்டம் நடத்துவதாக பருத்தித்துறைப் பொலிசாருக்கு இரகசியத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே அவர்கள் கூட்டம் நடந்த இடத்தை முற்றுகையிட்டு அவர்களைக் கைது செய்தார்களாம்.

கூட்டம் நடைபெற்ற இடத்தில் தந்திக்கம்பிகள் இருக்கக் கண்டதாகவும் அவற்றைப் பொலிசார் கைப்பற்றியிருப்பதுடன் அரசாங்கத்துக்குச் சொந்தமான தந்திக்கம்பிகள் அங்கு எப்படி வந்தன என்பது பற்றி விசாரணை செய்வதற்காக வீட்டுச்சொந்தக்காரர் பொலிஸ் பாதுகாப்பில்

#### அலுவலகத்தில் சோதனை

பொலிசாருக்குக் கிடைத்த மற்றொரு தகவலைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க சம்மேளன அலுவலகத்தில் யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கோஷ்டியொன்று நேற்றுக்காலை திடீர்ச் சோதனை நடத்தியது. பொலிஸ் கோஷ்டி அங்கு சென்ற சமயம் எவரும் இருக்கவில்லையென்றும் வீட்டுக்காரரின் உதவியோடு அலுவலகக் கதவைத் திறந்து சோதனை செய்தபோது பொதுக் கூட்டம் பற்றிய துண்டுப் பிரசுரங்களும் கையெறி குண்டு எனச் சந்தேகப்படக்கூடிய 'பிளாஸ்டிக் பந்து' போன்ற ஒன்று இருக்கக் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் சொன்னார். இந்த 'பிளாஸ்டிக்' பந்து பற்றி ஆராயும் பொருட்டு இரசாயனப் பரிசோதகர் ஒருவர் கொழும்பிலிருந்து அழைக்கப்பட்டுள்ளாரென்றும் அந்த அதிகாரி கூறினார்.

அலுவலகக் காவற்காரர் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

#### ஏன் இந்த நடவடிக்கை

தங்கள் கட்சிக்காரியாலயத்தில் பொலிசார் நுழைந்து சோதனைசெய்து சில பொருள்களுக்குச் சேதம் விளைவித்திருப்பதாகவும் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலரைக் கைதுசெய்திருப்பதாகவும் சீனச்சார்புக்கம்யூனிஸ்ட்கட்சி யாழ்ப்பாணக்கிளைப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துவிட்டு பொலிசார் எதற்காக இந்தநடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பது தமக்கு விளங்கவில்லையென்றும் இது

# நைல் நதியின் கரையிலே அதிபர் நாஸர் அடக்கமானார்

## லட்சோப லட்சம் மக்கள் அழுது புலம்பினர்கள்

### வெளிநாட்டுத் தலைவர்கள் கண்ணீர் உகுத்தனர்

கெய்ரோ; அக். 1

**ஐக்கிய அரபுக்குடியரசின் அதிபரும், அரபு மக்களின் வீரத்தலைவருமான கமால் அப்துல் நாஸரின் பூதவுடல் இன்று பிற்பகல் நல்லடக்கம் செய்யப்பட்டது.**

அரபு நாடுகளின் விடுதலைக்கும், ஒருமைப்பாட்டுக்குமென கடைசி மூச்சுவரை அயராது உழைத்துக்கொண்டிருந்த அந்த வீரபுதல்வனின் சடலம் இன்று நிரந்தரமான அமைதியைத் தேடிக் கொண்டுவிட்டது. இலட்சோப லட்சம்மக்கள் தலைவரின் பிரிவைத்தாங்காமல் அழுது புலம்பும் ஓலம்வானை அதிரச்செய்து கொண்டிருந்த வேளையில், எகிப்திய தேசிய கீதம் நாஸர் புரிந்த வீர சாகஸங்களை நினைவு படுத்திக் கொண்டிருக்க அவரது பூத

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ

## ஊழியர் சபை இடதுசாரிகளிடம்

உடுப்பிட்டி, வியாழன் இலங்கைப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ ஊழியர் சபைத் தேர்தல் நேற்று மிகவும் பரபரப்பானசூழ்நிலையில் நடைபெற்றது. இ. போ. ச. பணியகத்தில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது.

மாலை 3 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்தது. பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்சபைத் தேர்தலில் இடதுசாரிகள் அதிக பெரும்பான்மை ஸ்தானத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

அதிகாரிகள் பகுதியிலிரு சபாபதி அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இதர போட்டி முடிவுகள் வருமாறு;

கண்டக்டர்கள் பகுதி திரு. வேலாயுதம் செல்வநாயகம், திரு. சுப்பர் சிவகுரு, திரு. சுப்பையா கனகரத்தினம்

சாரதிகள் பகுதி திரு. கே சபாரத்தினம், திரு. வே இராமலிங்கம், திரு. ரீ. தளையசிங்கம்.

பொறியியல் பகுதி திரு. கே சுப்பிரமணியம் (போட்டியில்லை) திரு குமார் இராமகிருஷ்ணன் (போட்டியில்லை)

தேர்தலில் வெற்றிபெற்ற ஊழியர்களை அவர்களின் ஆதரவாளர்கள் மலர்மாலை

## சைக்கிள் திருட்டு

மாவிட்டபுரம், வியா காங்கேசன்துறை பொலிஸ் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்துவருகிறதாம்.

பருத்தித்துறை துன்னாலையைச் சேர்ந்த செல்லையா என்பவரும், அராலி வடக்கை சேர்ந்த சிவகாந்தன் என்பவரும் தமது சைக்கிள் களவாடப் பட்டுள்ளதாக புகார் செய்துள்ளர்.

......

## ரூபா 700 பிணை

வல்வெட்டித்துறை, வியா தொண்டமானாறு கெருடாவிலைச் சேர்ந்த பொன்னன் கதிரமலை என்பவர் கடந்த ஆவணி மாதம் 28-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமிக்குருக்கள் தங்கப்பாக்கியத்தின் ரூபா 2280 பெறுமதியான 18 தங்கப்பவுண் தாலிக்கொடியைக் கத்தியைக் காட்டி பயமுறுத்தி அறுத்ததாகச் சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைதுசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செல்லுமாறும் மீண்டும் அடுத்த மாதம் 5-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## மகாஜன


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாலை 3 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்தது. பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்சபைத் தேர்தலில் இடதுசாரிகள் அதிக பெரும்பான்மை ஸ்தானத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

அதிகாரிகள் பகுதியிலிருந்து செயலாற்றுப் பகுதி உத்தியோகத்தர் திரு. வி. இராமலிங்கம், திரு. ரி. தளையசிங்கம்.

பொறியியல் பகுதி திரு. கே சுப்பிரமணியம் (போட்டியில்லை) திரு குமார் இராமகிருஷ்ணன் (போட்டியில்லை)

தேர்தலில் வெற்றிபெற்ற ஊழியர்களை அவர்களின் ஆதரவாளர்கள் மலர்மாலை சூட்டி வரவேற்றனர்.

(உடுப்-அம்பன் நி)

...மூச்சுவரை அயராது உழைத்துக்கொண்டிருந்த அந்த வீரத் தலைவனின் சடலம் இன்று நிரந்தரமான அமைதியைத் தேடிக் கொண்டுவிட்டது. இலட்சோப லட்சம்மக்கள் தலைவரின் பிரிவைத்தாங்காமல் அழுது புலம்பும் ஓலம்வானை அதிரச்செய்து கொண்டிருந்த வேளையில், எகிப்திய தேசிய கீதம் நாஸர் புரிந்த வீர சாகஸங்களை நினைவு படுத்திக் கொண்டிருக்க அவரது பூதவுடல் கல்லறையில் மிக அமைதியாக சயனம் கொண்டது.

...ஒரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செல்லுமாறும் மீண்டும் அடுத்த மாதம் 5-ந் திகதி கோர்ட்டில ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

...அவற்றைப் பொலிசார் கைப்பற்றியிருப்பதுடன் அரசாங்கத்துக்குச் சொந்தமான தந்திக்கம்பிகள் அங்கு எப்படி வந்தன என்பது பற்றி விசாரணை செய்வதற்காக வீட்டுச்சொந்தக்காரர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.

...திருப்பதாகவும் சிலச்சார் புக்கம்யூனிஸ்ட்கட்சி யாழ்ப்பாணக்கிளைப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துவிட்டு பொலிசார் எதற்காக இந்தநடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பது தமக்கு விளங்கவில்லையென்றும் இது கண்டிக்கத்தக்க அநாவசியமான செயலென்றும் கூறினார்

# 'பெரிய நெருக்கடி எதிர்நோக்கியுள்ளது'

உடுவில், வியாழன்

கூட்டரசாங்கம் பட்டம் பதவி முதலிய ஒரு சில சலுகைகளைத் தமிழ் மக்களுக்கு கொடுத்து தமிழினத்தை நிரந்தர அடிமைகளாக்க முயல்கிறது. பொருளாதார நிலை தாழ்வுற்றதால் ஒருசிலர் இவ்வித சலுகைகளுக்கு ஆசைப்படலாம் ஆனால் இனத்தை விற்று குறைகளை நிவர்த்தி செய்ய நினைப்பது மடமை. மறு தலை முறையிலாவது எமது இனம் இழந்த உரிமைகளைப் பெறுவது திண்ணம்.

உடுவிலில் நடைபெற்ற தமிழர் எழுச்சி தினவிழாவில் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் சங்குவேலி வெட்டுக் கட்டைப் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற இவ்விழாவிற்கு திரு ஜே. எஸ். டி. அரியரத்தினம் தலைமைவகித்தார்.

விழாவில் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் பேசியதாவது:

பண்டைக் காலத்தில் சிறுபான்மை இனத்தை ஒழிப்பதற்கு ஆட்சியாளர்கள் அவ்வினத்தின்மீது படையெடுத்தனர் இன்று அரசியல் சூழ்ச்சிகளால் இனத்தை அழிக்கமுன்வந்துள்ளார்கள் நம் நாட்டில் அரசியல் நிர்ணயசபை அரசியல் சட்ட திட்டங்களை உருவாக்குகிறது. சட்ட அடிப்படையில் இது உருவாகி வருவதால் இதைப்பற்றி எமக்கு தெரியாமலிருக்கலாம். ஆனால் நிச்சயமாக எம்மை ஒரு பெரிய நெருக்கடியான நிலை எதிர் நோக்கியுள்ளது.

திருவாளர்கள் புருஷோத்தமன் இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி செயலாளர் திரு சோ. சேனாதிராசா மூதவை உறுப்பினர் திரு எஸ். நடராசா உடுவில் கிராமசபைத் தலைவர் திரு எஸ். முத்துலிங்கம் திரு. மு. ஆலாலசுந்தரம் உட்பட பலரும் உரையாற்றினர்.

சிறுமி நாகேஸ்வரியின்மரணம் சம்பந்தமாகப் பாடசாலைப் பிள்ளைகளிடமோ பெற்றோரிடமோ தகவல் சேகரிப்பதற்கு தலைமைஆசிரியரும் இதர ஆசிரியர்களும்

மக்களின்இறுதி மரியாதை முடிந்ததும் மறைந்த ஜனாதிபதியின் பூதவுடல் ஹெலிக்காப்டர் மூலம் கெய்ரோவிற்கு 12 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நைல்நதியிலுள்ள கெசிரா தீவுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்பிரதேசத்தில்தான் நாசரும் அவரது தோழர்களும் மன்னர் பரூக்குக்கு எதிராகச் செயற்பட்ட தலைமைநிலையம் உள்ளது இங்கிருந்து எகிப்திய தேசியக் கொடியால் மூடப்பட்ட நாசரின் உடல் பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு இறுதி யாத்திரை தொடங்கியது. ஐக்கிய அரபுக் குடியரசு யுத்த மந்திரியின் தலைமையில் 40 ஜெனரல்களும், 5000 வீரர்களும் இவ்வூர்வலத்தை நடத்திச் சென்றனர். 101 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. அங்கிருந்து மஞ்சே எல் பக்றி என்னுமிடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மசூதிக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு அங்குள்ள ஸ்ளிங்கிறு

(4-ம் பக்கம் பார்க்க)

# செனட்சபையில் அனுதாபம்

கொழும்பு, வியாழன்

ஜனாதிபதி நாஸரின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை இன்று செனட்சபையில் நிறைவேறியது.

இன்று செனட்சபைத்தலைவர் திரு. இரத்னயக்கா தலைமையில் சபைகூடியது. திரு. இரத்னயக்கா பேசும்போது 'நடுநிலைமைநாடுகளின் முன்னணித் தலைவரான விளங்கிய ஜனாதிபதி நாஸர், இலங்கையின் உண்மையான நண்பராகவும் அரபுநாடுகளின் ஒற்றுமைச் சின்னமாகவும் விளங்கினர். எகிப்தின் சரித்திரத்தை புதிதாக்கி அரபுநாட்டில் உரிமை இழந்தவர்களும், தாழ்ந்திருந்தவர்களும் தலைநிமிர வழி வகுத்தார்' என்றார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு விஜயமானே பேசுகையில், சர்வதேச முக்கியத்துவம் பெற்ற தலைவராக விளங்கியவர் நாஸர் என்றும், அரபு-இஸ்ரேலிய யுத்தத்தின் தோல்வியிலும் எகிப்தின்புகழ்மங்காதவாறுகாத்தவர் என்றும் கூறினர்.

திரு சி. குமாரசூரியர் பேசும்போது, இஸ்லாத்துக்கும் சோஷலிஸத்துக்கும் முரண்பாடுண்டு என தான் நம்பவில்லையெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி நாஸர், குடியேற்ற நாடுகள் என்ற அடிமைத்தளையை அறுத்து சுதந்திரத்துக்கு வித்திட்டவர் என்றார்.

செனட்டர்கள் கிச்சிலான் டி. ஜி. வில்லியம், ஸ்டான்லி கல்பகே ஆகியோரும் பேசினர்.

# மகாஜன சம்பத சுவீப் முடிவு

கொழும்பு வியா.

நேற்று இழுக்கப்பட்ட மகாஜனசம்பத சுவீப்சீட்டிழுப்பில் ஒரே தொகையைப்பெறும் முதல்மூன்று டிக்கட்டுகளும் வருமாறு:-

08 L 000140-ரூ.66,450
22 N 000455-ரூ.66,450
30 D 000181-ரூ.66,450

தலா ரூ. 332-25 கொண்ட இதர ஆறுதல் பரிசுகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 17 A 000960 | 05A 000432 |
| 16A 000583 | 13 A 000337 |
| 07A 000845 | 09A 000301 |
| 26A 00 084 | 28A 000645 |
| 05 A 000473 | |
| 16B 000126 | 22B 000768 |
| 11B 000692 | 23B 000280 |
| 18B 000662 | 15B 000078 |
| 14B 000542 | 11B 000839 |
| 20B 000913 | 02B 000753 |
| 23C 000141 | 08C 000183 |
| 15C 000716 | 16C 000242 |
| 03C 000749 | 17C 000567 |
| 22C 000111 | 08C 000831 |
| 23D 000956 | 08D 000842 |
| 26D 000719 | 23D 000623 |
| 17 D000581 | 22 D000064 |
| 16 E000870 | 14 E000193 |
| 08 E000540 | 03 E000569 |
| 23 E000811 | 24 E000760 |
| 14 E000206 | 02 E000944 |
| 21 E000413 | 07 F000585 |
| 20 F000913 | 15 F000979 |
| 05 F000664 | 25 F000524 |
| 14 F000191 | 03 F000796 |
| 09 F000598 | 20 G000882 |
| 78 G000205 | 11 G000292 |
| 18 G000605 | 01 G000922 |
| 26G000856 | 27 H000174 |
| 17 H000833 | 19H000438 |
| 18 H000050 | 04H000427 |
| 09 H000957 | 22H000463 |
| 26 H000112 | 18 J000235 |
| 19 J000116 | 05 J000146 |
| 22 J000576 | 02 J000691 |
| 14 J000089 | 08 J000990 |
| 14 J000170 | 05 J000117 |
| 05 J000308 | 22 K000715 |
| 30 K000017 | 16K000497 |
| 11 K000036 | 12K000290 |
| 62 K000350 | 08L000893 |
| 14 L000381 | 17 L000964 |
| 03 L000457 | 07 L000903 |
| 28 L000999 | 22 L000223 |

# யாழ். விளையாட்டு அரங்கு வேலைகள் மீண்டும் தொடங்கும்

## அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

விளையாட்டுத்துறை அமைச்சரும் ஆட்சிமன்ற விவகார அமைச்சருமான திரு. கே பி இரத்னயக்கா நேற்றுக் காலை யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்குக்குச் சென்று அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேலைகளைப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணத்துக்கு ஒரு விளையாட்டு அரங்கு அவசியமென்றும் இதன் வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கான முயற்சிகளைத் தாம் கொழும்பு சென்றதும் மேற்கொள்வதாக அமைச்சர் தெரித்தார். கலாசார விவகார அமைச்சருடனும் புதைபொருளாராய்ச்சிக் கமிஷனருடனும் தாம் இதுபற்றிப் பேசுவதாகவும் அவர் கூறினர்.

யாழ்ப்பாணம் ஸ்ரீநாக விகாரைக்கும் அமைச்சர் சென்று அங்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார்

கோட்டை, வியாழன்

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் அஞ்சல்தொலைபேசித் தொடர்பு ஊழியர் சங்கத்தின் 24வது ஆண்டு பூர்த்திக் கூட்டம் நடைபெற்றது.

# 'இலங்கையை ஐந்தாக பிரித்தால் குழப்பங்கள் வரும்'

## இந்தியாவை உதாரணம் காட்டுகிறர் தெகியோவித்த எம். பி.

ஊர்காவற்றுறை, வியா.

'தமிழரசுக் கட்சியினர் இலங்கையை ஐந்தாகக் கூறுபோட முன்நிற்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் மட்டக்களப்புத் தமிழன் யாழ்ப்பாணத்தமிழன் கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் என்று இலங்கை மக்களை பிரித்துவைக்க நினைக்கிறார்கள். பெரிய நாடான இந்தியாவில் இன்று குழப்பங்கள் ஏற்படக் காரணம் இந்தியா பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டமையே. இந்நிலையில் இலங்கையையும் தமிழரசுக் கட்சியினர் கேட்பதுபோல் ஐந்தாகப் பிரித்தால் என்ன நிலை உருவாகும் என்பதை நாம் உணரவேண்டும்'

புளியங்கூடல் சமசமாஜ வாலிபர் ஆதரவில் சரவணை புளியங்கூடல் சந்தியில் நடைபெற்ற பண்டாரநாயக்கா நினைவு விழாவில் தெஹியோவிட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. தனபால வீரசேகரா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சபாநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்

'கண்டியாத்திரை சென்று இந்நாட்டின் தமிழ்மக்களின் உரிமைகள் மறுக்கப்படவேண்டுமென்ற கோஷமெழுப்பிய திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் தீவிர வகுப்புவாதியான திரு. கே. எம். பி. ராஜரத்தினவையும் தமிழரசுக் கட்சியினர் கடந்த ஐந்து வருடங்களாக ஆதரித்துவந்தனர். 1956 ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதைப் பகிரங்கமாகக் கண்டித்து நடவடிக்கைகள் மேற்கொண்டவர்கள் திருவாளர்கள் கொல்வின் ஆர். டி, சில்வாவும், என். எம். பெரேராவும்தான் என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். இத்தருணத்தில் தான் கொல்வின் ஆர் டி சில்வாவுக்குக் குண்டெறியும் பட்டது என்றார்.

'கூட்டணி ஆட்சியின் கீழ் மக்கள் இன மத மொழி வேறுபாடற்று நடாத்தப்படுவார்கள். கடந்த தேர்தலில் 117 ஆசனங்களைக் கைப்பற்றிய நாம் தமிழ் மக்களின் நலனைக் கருதியே தமிழரான திரு. செல்லையா குமாரசூரியருக்கு மந்திரிப் பதவியையும், திரு. எம். ஸி சுப்பிரமணியத்துக்கு நியமன அங்கத்தவர் பதவியையும் கொடுத்தோம்' என அவர் மேலும் பேசுகையில் கூறினர். லங்கா சமசமாஜக் கட்சி வடபிரதேச அமைப்பாளர் திரு. அ. விசுவநாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் பால் கஞ்சி...

# யாழ். மக்கள் அனுதாபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'இன்று உலகமக்கள் அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் விட்டுவிட்டு ஜனாதிபதி நாஸர் பிரிந்துவிட்டார்' அவர், குறிப்பாக சாதாரண மக்களை ஈடேற்றியவர், இலாமிய வணக்கத்தை தலைமேற்கொண்டு எகிப்து மக்களையும் ஏனைய மக்களையும் இணைத்தவர்'

இவ்வாறு நேற்று யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற அனுதாபக்கூட்டத்தில்தலைமைவகித்துப்பேசிய ஜனாப்என்.எம் மீராமுகைதீன் கூறினர்.

கூட்ட ஆரம்பத்தில் இரண்டுநிமிடமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

சிவப்பு வெள்ளை கறுப்பு நிறங்கள் கொண்டதும் இரு நட்சத்திரம்பொறித்ததுமான பச்சைநிற கொடி தாங்கிய ஊர்வலம் நேற்று மாலை யாழ் மாநகரசபை மண்டபத்தை வந்தடைந்தது. இதில் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் சகலமதத்தினரும் கலந்துகொண்டு பேசினர். வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ. தியாகராசா உடுவில் எம். பி திரு. வி தர்மலிங்கம். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர, திரு விஸ்வநாதன். திரு. வி. பொன்னம்பலம், யாழ். நகர மேயர் திரு. ரி. எஸ் துரைராஜா, உதவிமேயர் திரு ஏ. துரைராஜசிங்கம், ஜனாப் எஸ். எம மீருன் சாகிப்பு. நியமன எம் பி எம் சி சுப்பிரமணியம், திரு அல்பிரட் துரையப்பா, ஜனாப் பஷிர், ஜனாப் காதர், திரு சோமசேகரம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(கு. வி, ம.)

...

## தீர்மானம்

பண்டத்தரிப்பு, வியா

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தை மூட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளும் தீர்மானம் பண்டத்தரிப்புக் கிராமசபை மாதாந்த கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேறியது.

# மகாவலியை இங்கு திருப்பவே அரசாங்கத்துடன் சேர்ந்தேன்

மட்டுவில் வியா

மகாவலியை வடக்கே திசைதிருப்பும் நோக்கத்துடன் அரசாங்கத்துடன் சேர்ந்த என்னை, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை திசை திருப்பும் நோக்கத்துடன் வந்துள்ளேன் என்று பலரும், பலவிதமாக பேசிக் கொள்கிறார்கள். எது எப்படி ஆனாலும் எனது இலட்சியம் நிறைவேறப்போகிறது. வடக்கே மகாவலி கங்கை திசை திரும்பத்தான் போகிறது. வடபகுதி செழிப்படையத்தான் போகிறது.

இவ்வாறு கிளிநொச்சிரெட்டிக்கோமைதானத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற விவசாயவிழாவில் கலந்து கொண்டுபேசிய தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தெரிவித்தார்.

திரு. குமாரசூரியர் மேலும் பேசியதாவது:-

திரு. ஆனந்தசங்கரி இலங்கையர், தமிழர் என்ற முறையில் என்நண்பர். இப்படியிருந்தும்கூட, அவர் எம்முடன் கலந்து தமிழ் மக்களுக்கு தொண்டு செய்யக் கூடிய நிலையில் இல்லாமலிருப்பதையிட்டு மிகவும் கவலைப்படுகின்றேன். அவரைத் தெரிவு செய்து ஆட்சிமன்றம் அனுப்பிவைத்த கிளிநொச்சித் தொகுதி மக்களாகிய நீங்கள் அவருக்குப் புத்திமதிகூறி, அரசாங்கத்தை ஆதரிக்கச் செய்ய வேண்டும். அரசாங்கத்துடன் இரண்டறக் கலப்பதின் மூலமே உருப்படியான சில காரியங்களை தமிழ் மக்களுக்கு அவர் செய்தவராக முடியும்.

அமைச்சர் திரு. இரத்தினயக்கா பேசுகையில் தொகுதி மக்களாகிய நீங்கள் உங்கள் எம். பி யை நல்ல முறையில் பயன் படுத்த வேண்டுமானால்அவரை அரசாங்கத்தை ஆதரிக்கச் செய்யவேண்டும் என்று தமிழில் பேசினர்.

கிளிநொச்சி எம். பி. திரு ஆனந்தசங்கரி பேசுகையில் தாம் எப்போதும் சோஷலிசப்பாதையை விட்டுத்தவறியதுகிடையாது. அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களை எப்போதும் ஆதரித்து வந்திருக்கின்றேன். இன்னும் ஆதரிப்பேன் இதை விடுத்து நான் என்ன செய்யமுடியும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: G. C. E (O/L) எண் கணிதம் 1963—1969 வினாக்களும் செய்கை விளக்கமும் 10 வினாப்பத்திரங்களும் வாய்ப்பாடும். விலை: 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 2981

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் வீடு கட்டுவதற்கேற்ற ஒன்பது பரப்பு நிலம் உடனடியாக விற்பனைக்குண்டு. காங்கேசன்துறை வீதியில் இருந்து நூறு யார் தூரத்தில் உள்ளது. முழுதாக அல்லது மூன்று துண்டுகளாக பிரித்து விற்கப்படும். "லாண்ட் இன்வெஸ்ட்மென்ட்", 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2983

புதிய ரயர்கள், பற்றறியுடன் கூடிய 25 சிறீ 6000 சீரிஸ் இன்ரநாஷனல் உழவு இயந்திரம் ரில்லர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. பால்ராசா கமம், 3-ம் வாய்க்கால், பரந்தன். 2403

காணி:

நல்லூர் செட்டித்தெருவில் இரண்டரைப் பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்கப்படும். விபரங்களுக்கு: 102, அம்பலவாணர்வீதி, யாழ்ப்பாணம். 2984

எட்டாம் வகுப்பு புவியியலில் சித்தி பெற புவியியல் வினுவிடை 1966 — 1969 ஆண்டு N. P. T. A. வினுக்களும் மாதிரி விடைகளும் புதுமுறைப் பரீட்சையில் I-ம் II-ம் பகுதி வினுக்களுக்கு விடையளிக்க உதவும். விலை: சதம் -/95 8-ம் வகுப்பு புவியியற் படவேலை, சம உயரக் கோட்டுப்பட வேலைக்குச் சிறந்த வழிகாட்டி. விலை: ரூபா 1/50. சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 2991

பற்றெறி சாச்சர் சாச் செய்வதற்கும் திருத்துவதற்கும் கடைக்குத் தேவையான முழு ஆயுதங்களும் விற்பனைக்குண்டு. டைன மோட்டர் வேக்ஸ், நம். 13, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம். 2987

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்
### இறைச்சிக்கடைக் குத்தகை 1971

மேற்படி குத்தகைக்கான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 1 - 10 - 1971 - லிருந்து 2-10-1971 பி. ப 3-00 மணிவரை என நீடிக்கப்பட்டுள்ளது.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
30-9-1970. 2481

## டாக்டருக்கு கி. ச. அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

"எமது கிராமசபையின் ஆயுள்வேத டாக்டராகத் தமது கடைசித் தினம் வரை சேவை செய்தவர் திரு. சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி, இவரது வைத்தியப் புலமையும், கடமை உணர்ச்சியும் எம்மாலும் பொதுமக்களாலும் மறக்க முடியாது" என கரைச்சிக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் வட்டக்கச்சி டாக்டர் திரு. சு. விநாயகமூர்த்தியின் மறைவையிட்டு அனுதாபத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில், கிராமசபைத் தலைவர் திரு த. செல்வத்துரை கூறினர்.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இரண்டு நிமிஷம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

(கு. வி. ம.)

### தேவை

அப்பளம், பற்பொடி, சவுக்காரம், தைலவகை, ரொபி, இனிப்பு வகை, பழரச பானவகை இவற்றில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. முன் அனுபவம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். தகைமைக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும். விளம்பர இல: 2402, C/o 'ஈழநாடு'. யாழ்ப்பாணம். 2402

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த
ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி—பத்மினி—நாகேஷ்
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த

சினிமா விமர்சனம்

## ஒரு விரல்

கையிலுள்ள ஒரு விரல் எத்தனை காரியங்களுக்குக் காரணமாக இருக்கிறது

ராஜா தியேட்டர் திரையில் காட்சியளித்துக்கொண்டிருக்கும் ஒரு விரல் ஒரு பெரிய மர்மத்தையே வைத்திருக்கிறது

பெரிய எஸ்ரேட் உரிமையாளர் எப்படி மாண்டார்? இதைத் துப்புத்துலக்க முனைந்த இளம் துப்பறியும் சிங்கம் எப்படிமாண்டது?

எஸ்டேட் கம்பனி மானேஜர், குடும்ப டாக்டர் விறகு பொறுக்கச் சென்ற தங்கைக்கு அடித்ததால் ஆத்திரம்கொண்ட அண்ணன். இதில் யார் கொலைகாரன்?

புதைகுழியிலிருந்த எலும்புக்கூடு எப்படி வெளியே தலையைக் காட்டுகிறது? எலும்புக்கூட்டிலிருந்த ஒரு விரல் எப்படி மாடி வீட்டு ஜன்னலின் கீழ் கிடந்தது?

என்ன எல்லாம் ஒரே கேள்வியாகக் கேட்கிறேனே என்று யோசிக்கிறீர்களா? மர்மக்கதையென்றுல் கேள்விகளாகத் தானிருக்கும். பதிலை நானே சொல்லிவிட்டால் படம் பார்க்கும் உங்களுக்கு சுவையிருக்காமல் போய்விடுமே!

இவன்தான் கொலைகாரனாக இருக்கவேண்டுமென்று ஒவ்வொருவரையும் சந்தேகிக்ககூடிய முறையில் கதை பின்னப்பட்டிருக்கிறது. யாருமே சந்தேகப்படாத ஒருவர்தான்தான் கடைசியில் கொலைகாரன் என்று வெளிப்படுகிறது. நல்ல சஸ்பென்ஸ்!

படத்தின் தொடக்கம் சிறிது விறுவிறுப்பற்றதாக இருந்தாலும் பின்கட்டங்கள் நுனி விரலில் நிற்கச் செய்கிறது!

கண்ணன் ராதிகா, தேங்காய் சீனிவாசன் ஆகியோரைத் தவிர மற்றவெல்லாம் புதுமுகங்கள்தான்.

பலவித ஆடல்களுண்டு! காதல் ஓட்டங்களுண்டு! 'கும் கும்' குத்துகளும் அடிதடிகளும் உண்டு!

பயங்கரக் காட்சிகளுக்கும் குறைவில்லை.

'ஒருவிரல்' அது எத்தனை விரல்களுக்கு வேலைவைக்கிறது. பார்க்கக்கூடிய மர்மப் படம் பாருங்களேன்!

— திரைவண்டு

உதைபந்தாட்டம்

## மத்திய கல்லூரியிடம் வட்டுக்கோட்டை தோல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மத்திய கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், இரு பிரிவுகளிலும் யாழ் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. சற்குணம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இப்போட்டியின் பின் நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியில், யாழ். மத்திய கல்லூரி மிகவேகமாக விளையாடி 1—0 கோலால் வெற்றி பெற்றது. இந்த கோலை வீரர் கநகநாயகம் மின்னல் வேகத்தில் போட்டார்.

இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## யாழ்: இந்து வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரிக்கும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

மேற்படி இரு கல்லூரிகளின் 2-ம், 3-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளினிடையே இப்போட்டி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இரு கோஷ்டிகளின் 3-ம் பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டிகளும் ...

## பரமேஸ்வரா வெற்றி

திருநெல்வேலி, வியாழன்

சமீபத்தில் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா ... கும் ப... வித்தியாலயத்திற்குமிடையில் பரமேஸ்வரா ...

## உடற்பயிற்சிப்போட்டியில் உடுப்பிட்டியின் சாதனை

இமையாணன், வியா

அகில இலங்கை உடற்பயிற்சிப் போட்டியில் உடுப்பிட்டிப் பாடசாலைகள் மகத்தான சாதனைகளை நிலைநாட்டியுள்ளன.

கடந்த மாதம் கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை உடற்பயிற்சிப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியினர் முதலாவது இடத்தை அடைந்துள்ளனர். இதே போல் பெண்கள்பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 16 வயதுக்குட்பட்ட பிரிவில் முதலாவதாகவும் 13 வயதுக்குட்பட்ட பிரிவில் இரண்டாவதாகவும் வந்துள்ளனர்.

இப் போட்டிகளின் முடிவில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்கள் பாராட்டுதலைப் பெற்றனர்,

யாழ் மாவட்டத்தில்நடைபெற்ற உடற் பயிற்சிப் போட்டியிலும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட பிரிவினர் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் யாழ். குழுக்களில் சிறந்தவர்கள் எனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் உடற்பயிற்சி ஆசிரியராக திரு ஏ. ஜெயராசாவும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் தேகப்பயிற்சி ஆசிரியையாக செல்வி பி. முத்துவும் கடமையாற்றுகின்றனர்.

......

## புகையிலை ஏற்றுமதிக்கு வழி செய்குக

புலோலி, வியா

விவசாயிகளின் நலன் கருதி புகையிலையை முன்னர்போல் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி தரவேண்டுமென்றும் பீடிப் புகையிலை உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் அதே வேளையில் அரசாங்கமே இதனை கொள்வனவு செய்து தரகர் தொல்லைகளை நீக்க உதவவேண்டும் என்றும் கோரி கெக்டர் கொப்பக்கடுவக்கிஅல்வாய் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிகிளை மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மேலும் அம் மகஜரில் தெரிவித்திருப்பவை, வருமாறு:

உருளைக்கிழங்கை கூடுதலாக உற்பத்தி செய்யவும் அதனை நீண்ட காலமாக பாதுகாக்கவும் துணையான மருந்து வகைகளைத் தந்துதவுக.

வெண்காயஇறக்குமதியை தடைசெய்து வடபகுதி வெண்காயத்தை நாடு முழுவதும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மாவட்ட அமைப்பாளர் திரு, எம். துரைராசா ஊடாக இம் மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### வெள்ளி 2—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணிசைந்தமிழ், 7-45 சித்திரம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5 30 மாணவர்மன்றம்.

இரவு 6-10 பொலிஸ் நிகழ்ச்சி, 6-15 வயலும்... 6-30 விவசாய நிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-05சித்திரம், 8-35 பேச்சு, 8-45 இஸ்லாமியகீதம், 9-30 உரையாடல், 10-00 நே...

## கிளைச் சங்கம் அமைக்கப்பட்டது

கொழும்புத்துறை, வியா

கட்டைப்பிராயில் மக்கள் மறுமலர்ச்சிக் கழகக் கிளையொன்றை சங்கத் தலைவர் திரு. நாகேஸ்வரன் ஆரம் ...

நாஸர் மறைவு

## உடுவில் எம். பி. அனுதாபம்

உடுவில், வியாழன்

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் கேணல் நாசரின் திடீர் மறைவு குறித்து உடுவில் எம். பி. திரு வி தர்மலிங்கம் அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்தார்.

"அதிபர் நாஸரின் திடீர் மறைவு ஈடுசெய்யமுடியாத பெரு நஷ்டம், மத்திய ஆசிய கண்டத்தின் எதிர்காலம் நாஸரின் மறைவால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது மத்திய கிழக்கு நாடுகளின் பாதுகாப்பாளராகவிளங்கிய நாஸர் இலங்கை மக்கள் மீது நல்லெண்ணமும் பெருமதிப்பும் கொண்டு அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவ முன்வந்தார். மத்திய ஆசிய நாடுகள் எதிர்காலத்தில் ஏகாதிபத்திய ஆட்சிகளுக்கு இடம்கொடுக்காதமுறையில் இனிமேல் இறைவன்தான் வழிசெய்ய வேண்டும்" என திரு தர்மலிங்கம் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

இமையாணன், வியாழன்


யாழ் மாவட்ட சாரணர் வருடாந்த சம்மேளனப் போட்டியில் முதலாவது இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அடைந்துள்ளது. யாழ்ப்பாணம்பழையபூங்காவில், யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் திரு ஜே ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இச் சாரண சம்மேளன விழாவில் யாழ் மாவட்டத்திலிருந்து சுமார் 33 பாடசாலைகள் கலந்து கொண்டன.

......

## பதில் நிதி மந்திரிக்கு இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

பதில் நிதிமந்திரி திரு. பெர்ணுண்ட் சொய்சாவுக்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை சுன்னுகம் பஸ்நிலைய மைதானத்தில் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. சமசமாஜ வாலிப சங்கங்களின் ஆதரவில் இவ்வரவேற்பளிக்கப்படுகிறது.



## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கீதபூஷணம் செல்வன் அ. சுகிர்தகுணசீலனின் இசை அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை மாலை வட்டுக்கோட்டை சிவன்கோவில் முன்றலில் நடைபெறுகிறது.

சங்கீதகலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் இராசவைத்தியர் திரு. அ. க. குமாரசாமியும் பண்டிதர் திரு க. மயில்வாகனம் ஆகியோரும் ஆசியுரை வழங்குவர். திரு. எஸ். பரம் தில்லைராசா, இசைமணி திரு. பி. கந்தசாமிப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கவிருக்கின்றனர்.

## நெல்லியடி ம. வித்தியாலயம் கோஷ்டி வெற்றி

பருத்தித்துறை, வியா

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மூன்ரும் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் நெல்லியடி விளையாட்டுக்கழகக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மத்திய மகாவித்தியாலயக் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கோஷ்டிக்கும் கட்டைவேலி தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மகாவித்தியாலயக் கோஷ்டி 1 கோலால் வெற்றிபெற்றது.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வியா

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் சன சமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. ஆ. பொன்னையா தலைமையில் நடைபெற்றது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. பொன்னையா
உபதலைவர்: க. முத்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி—பத்மினி—நாகேஷ் ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த

## எதிர்காலம்

REGAL JAFFNA

Daily 4 Shows

LEE MARVIN, BURT LANCASTER, CLAUDIA CARDINALE in

## THE PROFESSIONALS

[ADULTS]

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

## வெலிங்டன் யாழ்நகர்

(2-30, 6-30, 9-30)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம் உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

## துலாபாரம்

(தமிழ்)

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


மேற்படி இரு கல்லூரிகளின் 2-ம், 3-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளினிடையே இப்போட்டி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இரு கோஷ்டிகளின் 3-ம் பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 1—1 கோல்களைப் போட்டமையால் ஆட்டம் சரிசமனாக முடிவடைந்தது.

2-ம் பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இந்த இரு போட்டிகளுக்கும் திரு. எம். டி. தம்பிராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே நி)

— —

'ஏ' பிரிவில்

## சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 3 1 கோல்களால் வெற்றி பெற்றது.

'பி' பிரிவுப் போட்டியில் சென். ஜோசப் விளையாட்டுக் கழகம் 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இந்த இரு போட்டிகளும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (தே நி)


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6 30, 9-30

போயா, பிரீபோயா 2-30

சிவாஜி — சரோஜாதேவி நடித்த

## பாகப்பிரிவினை

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீபோயா 2-30

என்.ரி. ராமராவ்-ஜெயலலிதா நடித்த

## விடாக் கொடாக் கண்டன்

MANOHARA

Jaffna

Daily: 4-45, 7 & 9-45 p.m.

Poya, Prepoya 4 Shows

IT'S A MAD MAD MAD MAD WORLD

(Scope-color)


## பரமேஸ்வரா வெற்றி

திருநெல்வேலி, வியாழன்

சமீபத்தில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிக்கும் பத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திற்குமிடையில் பரமேஸ்வராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 3ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் பரமேஸ்வராக் கல்லூரி 2-0 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது

இரவு 6-10 ... நிகழ்ச்சி, 6-15 வயலும் 6-30 விவசாய நிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-05 சித்திரம், 8-35 பேச்சு, 8-45 இஸ்லாமிய கீதம், 9-[illegible] உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

## இளைஞர் சங்கம் அமைக்கப்பட்டது

கொழும்புத்துறை, வியா

கட்டைப்பிராயில் மக்கள் மறுமலர்ச்சிக் கழகக் கிளையொன்றை சங்கத் தலைவர் திரு. நாகேஸ்வரன் ஆரம்பித்துவைத்தார். தலைவர் உரையாற்றுகையில் எமது உரிமைகளைப்பெற பல கிளைகள் உதயமாகவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.


வண்ணப்பட ஒளிப்பதிவிலும்; எண்ணப்படியான காட்சி அமைப்பிலும் சிறந்த பாடல்களுக்கும் பரிசுபெற்ற படம்

## யாழ். வின்ஸர் திரையில்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன் ★ காஞ்சனா

★ நாகேஷ் ★ மஞ்சுளா

நடித்த



ஜெம் மூவீஸ்

## சாந்தி நிலையம்

டைரக்ஷன்-G.S.மணி B.Sc., • ஈஸ்ட்மென் கலர்-ஜெமினி

உங்கள் குழந்தைச் செல்வங்களுடன் பார்த்து மகிழவேண்டிய படம்.


பெர்ஞர்ட் சொய்சாவுக்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை சுன்னாகம் பஸ்நிலைய மைதானத்தில் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. சமசமாஜ வாலிப சங்கங்களின் ஆதரவில் இவ்வரவேற்பளிக்கப்படுகிறது.

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம் 16-ம்திகதி (2-10-70)

மேஷம்- கடமையில் தடை ஏற்படும். காலதாமதத்தால் பொருட்செலவு உண்டாகும். பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும்.

ரிஷபம்- தந்தைவழி ஆதரவு தவறுமல் கிடைக்கும் தடைகள் எல்லாம் தவிடுபொடி. தனிக்கொடி பறக்கும்.

மிதுனம்- கற்றதனுல் பயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர்கள் போற்றுவர். ஆதரவு பெருகும்.

கடகம்- எதிர்பார்த்த பணவரவுக்கு இடமுண்டு. பூமியால் இலாபம் கிடைக்கும். புத்திரவழியாலும் நன்மை உண்டு.

சிம்மம்- கழுகுப்பார்வை வட்டமிடும். காத்திருப்பர் பகைவர். நிதிநெருக்கடியை லவிர்க்க மதிவழி நில.

கன்னி- அடிசறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம்பெறலாம். ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

துலாம்- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

விருட்சிகம்- இருள் மண்டிக்கிடக்கும். இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

தனுசு- உறவுகள் பலப்படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழி பிறக்கும். உவப்பானதினம்.

மகரம்- கனிவான பேச்சு காந்தம் போல பார்வை கன்னியர் உறவு காதலுக்கும் இடமுண்டு கவர்ச்சிகரமான நாள்.

கும்பம்- தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும், பிணக்கு இடங்கொடாது உடல்நலத்தை பேணவும்.

மீனம்- பொன்னுனவாழ்வு பெண்ணலே கிட்டும். கண்ணியம் கடைவிரிக்கும் கடமையும் சிறக்கும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

அம்பாள் சன சமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. ஆ. பொன்னையா தலைமையில் நடைபெற்றது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. பொன்னையா உபதலைவர்: க. முத்தையா செயலாளர்: ச. சிவசுப்பிரமணியம் உப செயலாளர்: சி. கந்தசாமி தனதிகாரி: கு. பொன்னுத்துரை உப தனதிகாரி: நா. சண்முகநாதன் நிர்வாக உறுப்பினர் திரு. சு. இராசகோபால் சி. மகாலிங்கம் சி. அப்புத்துரை ஆ. சுப்பிரமணியம், அ. லோகநாதன்.

0 0 0

பூநகரி, வியா

பூநகரியில் சமசமாஜ வாலிபர் சங்கக்கிளையொன்றை பூநகரிப்பகுதி அமைப்புச் செயலாளர் திருவாளர் எஸ். கே. திருவருள் ஆரம்பித்து வைத்தார்.

உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் தலைவர் திரு. பொன் விநாயகமூர்த்தி இணைச்செயலாளர்கள் திரு. பொ தில்லைநாதன் திரு. சி நடராசா தனதிகாரி: திரு இ இராசரத்தினம் 5 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது!

0 0 0

நயினூர் சு.க. கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

லங்கா சுதந்திரக்கட்சியின் 2-வது ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரியப்பட்டனர். திரு. எஸ். ஏ. கந்தசாமி மீண்டும் தலைவராகத் தெரியப்பட்டார். செயலாளராக திரு. ச. சோமசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டார். மற்றும் உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு: உப காரியதரிசிகள் திருவாளர்கள் ச, குணரத்தினம், சி க. முருகேசு, ஆ. இரத்தினசிங்கம், உபதலைவர்கள் திருவாளர்கள் செ. ப ஜீவானந்தம், வை. பாலசுப்பிரமணியம், த. மகேஸ்வரன், தனதிகாரி: திரு. வை. செல்வநாயகம், நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. தர்மலிங்கம் சி. சங்கரப்பிள்ளை, ச. பண்டிதர், க காசிலிங்கம்.

0 0 0

சைவ இளைஞர் சங்கம்

தாவடி சைவ இளைஞர் சங்கப் புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:-

தலைவர் திரு. அ. கமலநாதன், உபதலைவர் திரு. இ. இராமச்சந்திரன். செயலாளர் திரு. தி. ஆரியரத்தினம், உபசெயலாளர் திரு. வை. குணநாதன், பொருளாளர் திரு. இ. லோகேஸ்வரன், உப பொருளாளர் திரு. இ. சந்திரசேகரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பியநாடுகளில் சிறையிருந்த அரபுக்கொமாண்டோக்கள் விடுதலை

## லைலா காலித் முதலில் விடுவிக்கப்பட்டார்

லண்டன், செப். 1

**ஐரோப்பிய நாடுகளில் சிறைவைக்கப்பட்டிருந்த அரபுக்கொமாண்டோக்கள் ஏழுபேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

ஜோர்டானில் கொமாண்டோக்களால் பணயமாக வைத்திருக்கப்பட்ட கடைசி ஆறு அமெரிக்கர்களும் விடுதலை செய்யப்பட்டதையடுத்த மேற்படி கொமாண்டோக்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் விமானமொன்றில் ஏற்றப்பட்டு மேற்காஸியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார். பிரிட்டனில் சிறைவைக்கப்பட்டிருந்த கொமாண்டோ இளம் பெண்ணான லைலா காலித் முதன் முதல் விடுதலைசெய்யப்பட்டார்.

பிரிட்டனில் மூன்று வாரமாகச் சிறையில் வைக்கப்பட்டிருந்த அரபுக்கொமாண்டோப் பெண்மணியான லைலாகாலித் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் விடுதலை செய்யப்பட்டார். இவர் விமானம் ஒன்றைக் கடத்த முயன்ற பொழுது பிரிட்டிஷ் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அரபுக் கொமாண்டோக்களினால் திசை திருப்பப்பட்ட விமானப் பிரயாணிகள் எல்லோரையும் விடுதலை செய்தாலே சிறையில் இருக்கும் பாலஸ்தீனக் கொமாண்டோக்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்திருந்தது. இப்பொழுது எல்லாப் பிரயாணிகளும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதனால், பிரிட்டிஷ் அரசாங்கம் லைலா காலித்தைவிடுதலைசெய்தது. அவர் லண்டனில் இருந்து பிரிட்டிஷ் விமானப்படை விமானத்தில் கெய்ரோவிற்குப் பிரயாணமானார்.

சுவிற்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் சிறை வைக்கப்பட்டிருந்த மற்றும் 6 பாலஸ்தீனக் கொமாண்டோக்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் மூவர் மேற்கு ஜேர்மனியிலும் மற்றவர்கள் சுவிற்சர்லாந்திலும் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

## சீனவின்போக்கில் மாற்றம்?

### வெளிநாட்டு உறவுகளை பலப்படுத்துவதில் ஆர்வம்





ஹொங்கொங், அக் 1

கம்யூனிஸ்ட் சீன இன்று தனது 21-வது வருடாந்த தினத்தைக் கொண்டாடுகின்றது.

சீனவில் சமீப காலத்தில் பெரிதும் பரபரப்பு ஏற்படுத்தப்பட்ட கலாசாரப் புரட்சியின் காரணமாக எழுந்த குழப்பநிலைமை தணிந்து மீண்டும் பொருளாதாரம் துளிர் விடத் தொடங்கியிருக்கின்றது. நம்பிக்கையோடும் பெருமையோடும் சீன தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

சோவியத் யூனியனுடனன எல்லையில் ஏற்பட்ட மோதல் புகைச்சல் தணிந்துவிட்டிருக்கிறது.

அணுகுண்டு சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியும் விண்வெளிக் கலம் ஒன்றினை வெற்றிகரமாகச் செலுத்தியும் வல்லரசு நாடுகளுக்குச் சவால் விட்டுக்கொண்டு பெருமையுடன் விளங்குகிறது கம்யூனிஸ்ட் சீன.

சீனவி[illegible] மக்கள் காங்கிரஸ் விரைவில் கூட்டப்படவிருக்கின்றது. ஆறு ஆண்டுகளுக்கு முன் இந்த மகா சபை முழுமையாகக் கூடியது. பத[illegible] பட்ட [illegible] லியூ-ஷ[illegible]யின் இடத்துக்கு [illegible]

[illegible] தியாவுடனன உறவுகளும் இப்பொழுது சுமுகமாகிவருகின்றன.

சர்வதேச மட்டத்தில் மங்கியுள்ள தனது செல்வாக்கை சீன மீண்டும் பிரகாசமடையச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் சீனப்பிரதம மந்திரி சூ-என்-லாய் விரைவில் வெளிநாட்டுச் சுற்றுலாவொன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

## ஓர் ஆண்டில் மாத்திரம் ரூ. 190,000 லாபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

1966-ம் ஆண்டு முதல் திருப்திகரமாக இயங்கிவரும் எமது சமாஜம் 69-ம் ஆண்டில் மாத்திரம் 190,000 ரூபா லாபம் அடைந்திருக்கிறது என யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க வருடாந்தக் கூட்டத்தில் தலைவர் திரு. ஏ. ஜே. இராசதுரைசிங்கம் கூறினர்.

திரு. இராசதுரைசிங்கம் மேலும் கூறியதாவது:

கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்பில் எமது சமாசத்தின் நிலைமை முற்றாக மாறிவிடுமென எதிர்பார்க்கிறேன். இப்புதிய அமைப்பில் ஒவ்வொரு உள்ளூர் ஆட்சிமன்ற எல்லைக்குள் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமே இயங்கும். இந்தச்சங்கங்கள் தற்போதைய சங்கங்கள் இருக்குமிடத்தில் கிளைகளை நிறுவி இயங்கும் ஒரு சங்க எல்லைக்குள் இயங்கும் எந்தக் கிளையிலும் ஒரே விலையில் பொருட்கள் விநியோகிக்கப்படும்.

## விண்வெளியில் அன்ருடம் பறக்கலாம்!

சிட்னி, அக். 1

புதியரக வானவெளிக் கப்பல்களை விடுவதற்கு இப்போது திட்டங்கள் உள்ள அதே நேரத்தில், வான வெளிப்பயணத்தை அன்ருடமாக்கும் நோக்கம்கொண்ட நீண்டகால திட்டங்களும் உத்தேசிக்கப் பட்டுள்ளன.

விஞ்ஞான அற மானிய அமைப்புப்பள்ளியில் உரை[illegible] நிகழ்த்துவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு வந்த போயிங் கம்பெனியின் துணைத் தலைவரான ஜோர்ஜ் எச். ஹெஜ் இந்த நீண்ட காலத்திட்டங்கள் பற்றி[illegible] குறிப்பிட்டார்.

வகையில் சர்வ சாதாரணமாக்கி, வான வெளியிலான பணியைத் தொடர்ந்து நடைபெறுகிற ஒரு வேலையாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திரும்பத் திரும்பப் பயன்படுத்தத்தக்க பெரிய ராக்கெட் ஒன்றை இதற்குப் பயன் படுத்துவது என்பது ஹெஜ் குரூப்பின் திட்டமாகும், மற்ற கோஷ்டிகளின் எண்ணமும் அதேதான். ஏவுகிற கட்டத்தில் அதன் எடை 40லட்சம் ராத்தலாக இருக்கும். அதாவது இது [illegible] போயிங் விமானங்களின் எடைக்குச்சமமாக இருக்[illegible]

## லட்சோப லட்சம் மக்கள் நாஸருக்கு இறுதி அஞ்சலி

கெய்ரோ, அக். 1

காலஞ்சென்ற ஐ. அ. குடியரசுத் தலைவர் நாஸரின் இறுதி யாத்திரையில் உலகத் தலைவர்கள் பலரும்வந்து கலந்துகொண்டனர். லட்சக்கணக்கான மக்கள் நாஸரின்பூதவுடலுக்கு தம் இறுதி மரியாதையை செலுத்தினர்கள். நீண்ட கியூவரிசைகளில் நின்றும், தலைவரின் மறைவை சகிக்கமுடியாமலும் பலர் மயக்கமுற்றுவிழ்ந்தனர்.

காலஞ்சென்ற ஐ. அ குடியரசு ஜனதிபதி கமால் அப்துல் நாஸரின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு மரியாதை செலுத்துவதற்காக [illegible]

வந்தனர். அரபுக்கொமாண்டோக்களின் தலைவர் அரபாத்தும், ஜோர்டான் மன்னர் ஹூசேனும் கெய்ரோ விலேயே உள்ளனர்.

கெய்ரோவில் குப்பே மாளிகையில் மக்கள் மறைந்த தம்தலைவருக்கு மரியாதை செய்வதற்காக நாஸரின்பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. கண்களில் கண்ணீர் வழிய நின்ற மக்கள் கூட்டம் நெஞ்சை உருக்கும் காட்சியுடையதாய் இருந்தது. 'நாஸர் நீ இறககவில்லை. அரபு மக்களின் இதயங்களில் இருக்கின்ருய்' என்று சொல்லியவண்ணம் பலர் [illegible]

### பட்டம்மாளுக்கு பொன்னடை

கோயம்புத்தூர், ஒக் 1

பிரபல கர்நாடக சங்கீத பாடகி திருமதி டி. கே. பட்டம்மாளுக்கு ஸ்ரீ தியாகராஜா சபையின் 12-வது ஆண்டு விழாவில் பொன்னடை அணிவிக்கப்பட்டது. சபையின் சார்பில் இன்னெரு சிறந்த பாடகியான திருமதி எம். எல். வசந்தகுமாரி திருமதி பட்டம்மாளுக்கு பொன்னடையைப் போர்த்தினர்.

## பிரி. — முத்திரைக்கு இந்தியப் பதக்கம்

லண்டன், அக். 1

காந்தி நூற்ருண்டு விழாவை ஒட்டி சென்ற ஆண்டு பிரிட்டனல் வெளியிடப்பட்ட தபால் தலைக்கு பாரத தபால் பகுதியினரின் தங்கப்பதக்கம் கிடைத்திருக்கிறது. காந்தியின் உருவப் படத்தை உடையது இந்தத் தபால் தலை.

காந்தி நூற்ருண்டையொட்டி வெளியிடப்பட்ட முத்திரைகளின் கண்காட்சி ஒன்று பிரிட்டனில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் 35 நாடுகள் கலந்துகொண்டன. 65 தபால் தலைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. இக்கண்காட்சியில் வைக்கப்பட்ட தபால்தலைகளில்மிகச்சிறந்ததெனத் தெரிவு செய்யப்பட்ட, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட இத்தபால் தலைக்கே இந்திய அராங்கத் தபால் பகுதியினரின் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

இத்தபால் தலைக்குரிய படத்தை வரைந்தவர் திருமல்லிக்காகும். இவர் ஓர் இந்தியராவார். இப்பொழுது இவர் பிரிட்டனில் வசித்து வருகிருர்.

## எகிப்துக்கு தொடர்ந்து ரஷ்ய உதவி கிடைக்கும்

மாஸ்கோ, அக் 1

ஐக்கிய அரபுக்குடியரசுக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து ஆயுத உதவிகளையும், தொழில் நுட்ப உதவிகளையும் கொடுத்துவருவதென்று முடிவுசெய்திருக்கின்றது.

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் காலமானதால் சோவியத் யூனியனின் போக்கில் மாறுதல் ஏற்படுமோ என்ற சந்தேகம் இப்பொழுது தீர்ந்துவிளது.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் விற்பனைசெய்வதற்கு அதிபர் நிக்ஸனுக்கு அதிகாரம்வழங்கும் தீர்மானத்தை அமெரிக்க மக்கள் சபை ஏற்றுக்கொண்டதால் சோவியத் யூனியன் மேலும்அதிக உதவிகளை ஐக்கிய அரபுக் குடியரசுக்கு வழங்க முன்வரலாம் என்று கருதப்படுகின்றது.

## "வட்டு. இந்துக்கல்லூரியில் 8-ம் வகுப்பை தொடர்ந்து நடத்த அனுமதிக்கவும்"

சித்தன்கேணி, வியாழன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பெற்ருர்-ஆசிரியர் சங்க நிர்வாகசபை, இக்கல்லூரியில் அடுத்த வருடம் ஜனவரி தொடக்கம் எட்டாந்தர வகுப்புகளைத் தொடர்ந்து நடாத்த விசேஷ அனுமதி வழங்குமாறு கோரி, கல்வி மந்திரிக்கு, ஒரு மகஜரை அனுப்பியுள்ளது.

வட்டுக்கோட்டைக் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் அரசாங்க மகாவித்தியாலயம் இது ஒன்றே எனவும், இப்பகுதியிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் எட்டாம் வகுப்புத் தொடக்கம் கற்பதற்குப் போதிய இடவசதி, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் ஆய்வுகூட வசதிகள் இக் கல்லூரியில் உண்டெனவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைக் கிராமத்தில் உள்ள எட்டுக் கனிஷ்ட பாடசாலைகளிலும் எட்டாம் வகுப்புக் கல்விக்கு விசேஷசமாக விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்ப[illegible]

### க.பொ.த. ஆசிரியர் நியமனத்தில் சிக்கல்

பருத்தித்துறை, வியா

தற்பொழுது க. பொ. த. (சாதாரண)ப் பரீட்சையில் குறிப்பிட்ட சில பாடங்களில் திறமைச் சித்திபெற்றவர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்து குவிந்து கொண்டிருப்பதைக் கருத்தில் வைத்து இத்தனை பேருக்கும் எவ்வாறு நியமனம் வழங்க முடியுமென்று கொழும்பு கல்விப் பகுதியைச் சேர்ந்த ஓர் உயரதிகாரியிடம் நமது நிருபர் கேட்டபோது அவர் கூறியதாவது:-

'மாநில மட்டத்தில் ஏராளமான மனுக்கள் நிராகரிக்கப்படும். பொதுவாகப் பரீட்சையில் சித்திபெறுபவர்களில் குறிப்பிட்ட சில விசேட பாடங்களில் திறமைச் சித்திபெறுவோரின் மனுக்களே கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்படும். மனு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிக்கமுடியாமலும் பலர் மயக்கமுற்றுவிழ்ந்தனர்.

காலஞ்சென்ற ஐ. அ. குடியரசு ஜனாதிபதி கமால் அப்துல் நாஸரின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு மரியாதை செலுத்துவதற்காக உலகத்தலைவர்கள் எகிப்தின் தலைநகரான கெய்ரோவிற்கு வந்துசேர்ந்தனர் ரஷ்யப் பிரதமர் கொஸிஜின், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநயக்கா, பிரான்ஸ் பிரதமர் டெல்மார், சிரியா ஜனாதிபதி அத்தாசி, ஆகியோர் தலைநகருக்கு வந்து சேர்ந்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதியின் சார்பில் ஒரு குழுவும், பிரிட்டனின் சார்பில் வெளிநாட்டமைச்சர் சேர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் தலைமையிலான குழுவும், சைப்பிரஸ் ஜனாதிபதி ஆச்பிஷப் மக்காரியஸ், இந்திய உபஜனாதிபதி பதக். சூடான் தலைவர் நுமேரி. பாகிஸ்தான் சார்பில் டாக்டர் ஏ. எம். மாலிக் ஆகியோரும் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள தலைநகர் நின்ற மக்கள் கூட்டம் நெஞ்சை உருக்கும் காட்சியுடையதாய் இருந்தது. 'நாஸர் நீ இறக்கவில்லை, அரபு மக்களின் இதயங்களில் இருக்கின்றாய்' என்று சொல்லியவண்ணம் பலர் புலம்பினர், தங்கள் சோகம் தாங்காது பலர்மயக்கமுற்று விழுந்தனர்.

வீதிகளில் மக்கள் வெள்ளம் கட்டுக்கடங்காமல் இருந்ததினால் சாலைப்போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன. கறுப்புச் சட்டமிட்ட நாஸரின் பெரிய உருவப்படத்தைவீதிகள் தோறும் ராணுவ வீரர்களும், மக்களும் ஏந்திய வண்ணம் இருந்தனர் எங்கு பார்த்தாலும் மக்கள் கண்களில்இருந்து கண்ணீர் ஓடியபடியே இருந்தது.

ஜனாதிபதி நாஸரின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளை அமெரிக்க செயற்கைக்கோளான செல்டார் உலகம் முழுவதும் ஒலிபரப்புமென கெய்ரோவில் அறிவிக்கப்பட்டது.

(ஒ)டை அணிவிக்கப்பட்டது. சபையின் சார்பில் இன்னொரு சிறந்த பாடகியான திருமதி எம். எல். வசந்த குமாரி திருமதி பட்டம்மாளுக்கு பொன்னாடையைப் போர்த்தினர்.

## "ஏகோபித்து தொழிற்பட வேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"பெற்றூர், ஆசிரியர், பழைய மாணவர்கள், கல்வி அதிகாரிகள் அதிய நாலு வகையினரும் ஒத்துழைத்து ஏகோபித்த முறையில தொழிற்பட்டாலன்றி தினம் தினம் பெருகிவரும் மாணவர்களின் தொகைக்கு ஏற்ப நாம் பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது. 450க்கு மேற்பட்ட மாணவர்களும் 13 ஆசிரியர்களும் உள்ள இப் பாடசாலைக்கு ஒரு கிணறு தானும் இல்லாதது கவலைக்குரியது. குடிதண்ணீர் போன்ற அத்தியாவசிய தேவைகளைக் கவனித்து ஆவன செய்ய வேண்டியது ஆட்சியாளருக்கும் பெற்றுருக்கும் உரியபுண்ணியப் பணியாகும்"

இவ்வாறு பரந்தன் குமரபுரம் சைவவித்தியாலயப் பெற்றூர் ஆசிரியர் சங்க விசேஷ கூட்டத்தில் தலைமை உரைநிகழ்த்துகையில் மேற்படி பாடசாலை அதிபர் திரு ஆர், ரி. சுப்பிரமணியம்கூறினுர்.

ஆசிரியர்கள் திரு. மு.சுப்பையா, திரு.வை, நடராஜா, திரு. பு. கிருஷ்ண சுவாமி திருமதி மீனுட்சி சுந்தரலிங்கம் உட்படப்பலர் பேசினர் பாடசாலைக்கான ஆக்கவேலைகளில் ஈடுபட திரு. வே. சுப்பிரமணியம் தலைமையில் உபசபை ஒன்று நிறுவப்பட்டது. (கு வி ம)

...ரஸ் விரைவில் கூட்டப்படவிருக்கின்றது. ஆறு ஆண்டுகளுக்கு முன் இந்த மகா சபை முழுமையாகக் கூடியது, பதவி நீக்கம் செய்யப்பட்ட ம...கள் சீனத் தலைவர் லியூ-ஷா...ஸியின் இடத்துக்கு வேருெருவரை இந்த மகா சபை தேர்ந்தெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய தினக் கொண்டாட்டங்களின் பின்னர் எந்தச் சமயத்திலும் இந்த மககள் காங்கிரஸ் சபை கூடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சீனத் தலைவர் மா-ஒ-சே-துங்கின் சிந்தனைகளைப் படியுங்கள், வர்க்கத் துரோகிகளுக்குப் பலத்த அடிகொடுங்கள் புரட்சியைக்கைக்கொண்டு உற்பத்தியைப் பெருக்கிப்பொருளாதாரத்தைவளமாக்கும்அதேசமயம் யுத்தத்துக்கும் தயாராகவேண்டும் என்று சீன மக்களுக்கு உபதேசம் செய்யப்படுகின்றது.

செஞ்சீனு விண்வெளிக் கலமொன்றை வெற்றிகரமாகச் செலுத்தியிருப்பதால் மிகவிரைவிலேயே அது வெகு தொலைவிலுள்ள இலக்குகளை நோக்கிப் பாயும் ஏவுகணைகளையும் பரிசோதிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சோதனையை இவ்வாண்டிலேயே சீனு நடத்தும் என்று மேற்கத்திய விஞ்ஞானிகள் கருதுகிறுர்கள். இப்படியான ஒரு ஏவுகணையை சீனு செலுத்துமாளுல் அதன் இலக்கு பசிபிக்சமுத்திரத்தில் அல்லது இந்து சமுத்திரத்தில் அமையலாம் பசிபிக் சமுத்திரத்தில் அமையுமாளுல் அது அமெரிக்காவை திக்குமுக்காடச்செய்யும் இந்து சமுத்திரமாளுல் இந்திய மக்களையும் இப்பகுதியிலுள்ள இதர மக்களையும் கலக்கத்தில் ஆழ்த்துவதாயிருக்கும்.

தலைவர் மா-ஓ-வின் சிந்தனைகள் அடங்கிய சிறு கைநூல் சீன மக்கள் ஒவ்வொருவரது கையிலும் காணப்படுகின்றது; அதனை வைத்திருக்காத சீனர் எவரும் துரோகியாகக் கணக்கிடப்படலாமென்று சொல்லப்படுகின்றது. பழங்கால அறிஞர் கான்பூஷியஸின் சிந்தனைகளைப் போல் மா-ஓ சிந்தனைகள் போற்றப்படுகின்றன.

கலாச்சாரப் புரட்சியின் போது வெளிநாடுகளுடன் சீனுவுக்கு ஏற்பட்ட மனக்கசப்புகள் சிறிது சிறிதாகக் குறைந்துவருகின்றன திருப்பியழைக்கப்பட்ட தூதுவர்கள் அனைவரும் மீண்டும் அனுப்பப்படுகிறுர்கள். இந்

அமைப்புப்பள்ளியில் உ... நிகழ்த்துவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு வந்த போயிங் கம்பெனியின் துணைத் தலைவரான ஜோர்ஜ் எச், ஹெஜ் இந்த நீண்டகாலத்திட்டங்கள் பற்றி குறிப்பிட்டார்.

அக்கம்பெனியின் வான வெளிபிரிவுக்கு அவர் ஜெனரல் மானேஜராக இருப்பவர்.

வானவெளிப் பயணத்தைச் சர்வசாதாரணமாக்கி கிட்டத்தட்ட அன்றூடம் போய் வருகிறவகையில் ஷட்டில் விடும் திட்டத்தை ஆராய்ந்துவரும்கூட்டமைப்பில் போயிங் கம்பெனியும் இன்னொரு விமானக் கம்பெனியும் அங்கம் வகிக்கின்றன.

அமெரிக்காவைச் சேர்ந்த பல பெரிய நிறுவனங்கள் இத்திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ளன.

'ஷட்டில்'' ர்வீஸ் என்று எளிய வார்த்தையில் சொல்லி விட்டாலும் இத்திட்டம் எளிதில் சாத்தியமாகக் கூடியதல்ல.

எனினும் வான வெளிப் பயணததைக் கிட்டத்தட்ட அன்றூடம் போய் வருகின்ற ஹெஜ் குரூப்பின் திட்டமாகும், மற்ற கோஷ்டிகளின் எண்ணமும் அதேதான். ஏவுகிற கட்டத்தில் அதன் எடை 40லட்சம் ராத்தலாக இருக்கும். அதாவது இது போயிங் விமானங்களின் எடைக்குச்சமமாக இருக்கும். சிறிய நாசகாரிக்கப்பலின் எடைக்குச்சமம் என்று சொல்லலாம்.

இப்பிரம் மாண்டமான ராக்கெட், ஆட்கள் உட்கார்ந்து செல்கிற கலத்தை சுமந்து செல்லும். அக் கலத்தின் எடை 8 லட்சம்ராத்தல் இருக்கும். அதுகிட்டத்தட்ட ஒரு போயிங்-747 விமானத்தின் எடைக்குச் சமம்.

அந்த ராக்கெட் சந்திர மண்டலப் பயணத்துக்கான கலத்தை சுமந்துசென்ற சாட்டர்ன் ராக்கெட்டைப் போலவே வானில் ஏவப்படும்.

கிளம்புகிற இடத்திலிருந்து 40 மைலுக்கு அப்பால் வானில் 2,00,000அடி உயரத்தில் வான்கலம் அந்த ராக்கெட்டிலிருந்து தனியே பிரித்துவிடும். ராக்கெட் மறுபடி கீழே இறங்கும். அதனை திரும்பத் திரும்ப இதே மாதிரி பயன் படுத்தலாம்.

...டுள்ளது.

வட்டுக்கோட்டைக் கிராமத்தில் உள்ள எட்டுக் கனிஷ்ட பாடசாலைகளிலும் எட்டாம் வகுப்புக் கல்விக்கு விசேஷமாக விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பதற்கு ஏற்ற வசதிகள் மிகக் குறைவாயுள்ளன எனவும் பிரஸ்தாப மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிள்ளைகளின் கல்வி நலனையும், அரசாங்கத்திற்கு ஏற்படக் கூடிய மேலதிக செலவையும்கருதி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் எட்டாந்தர வகுப்புகள் தொடர்ந்திருக்க விசேஷ அனுமதி வழங்குவதே சிறந்த வழி எனவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

...கப்படும். பொதுவாகப் பரீட்சையில் சித்திபெறுபவர்களில் குறிப்பிட்ட சில விசேட பாடங்களில் திறமைச் சித்திபெறுவோரின் மனுக்களே கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்படும். மனையியல் வர்த்தக பாடங்கள் சுருக்கெழுத்து. ஆகியவற்றில் திறமைச் சித்தி விரும்பத்தக்கது. இம் மனுக்கள் பின்னர் மீண்டும் பரிசிலனை செய்யப்பட்டு, அவற்றிலும் பல நிராகரிக்கப்பட்டபின், திருவுளச்சீட்டு மூலமே மிகுதிமனுக்கள் தெரிவுசெய்யப்படும்'.

ஆனுல் இது தற்காலிகமாகத் தாங்கள் ஆலோசித்திருக்கும் ஒருவழி யென்றும். வேறு பொருத்தமான வழிகள் இருப்பின் அவையும் கையாளப் படலாமென்றும் அவர் கூறினுர்.

மதராஸ் வானெலி

# சென்னை வானெலி என ஒலிக்கும்!

சென்னை, அக். 1

இதுவரை காலமும் தமிழ் நாட்டில் அறிவிப்புக்களின்போது (மதராஸ் வானெலி நிலையம்) என்று அறிவித்து வந்ததை மாற்றி 'சென்னைவானெலி நிலையம்' என்று அறிவிக்கும்படி மத்தியஒலிபரப்பு அமைச்சர் உத்தரவிட்டிருக்கிர்.

மதராஸ் வானெலி என்பதை சென்னை வானெலி என்று மாற்ற வேண்டும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி மத்திய அரசுக்கு எழுதியிருந்தார் இப்படி மாற்றுவிடில் வானெலி நிகழ்ச்சிகளில் தமிழ் நாடு அமைச்சர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் அறிவித்திருந்தார்,

வாயுகுழாய் வெடித்து

## 150 பேர் பலியாகினர்

மெக்ஸிக்கோ, அக். 1

மெக்ஸிக்கோசிற்றிக்குவடமேற்கேயுள்ள சிறுகிராமம் ஒன்றில் பெட்ரோல் வாயு குழாய் ஒன்று வெடித்ததனுல் 150 பேர் இறந்தனர் 200 அடி உயரத்துக்கு தீ கொழுந்துவிட்டு எரிந்தது பெரும்பாலான மக்கள் பக்கத்திலுள்ள மலையில் தஞ்சமடைந்தனர். கிராமம் முழுவதும் நாசமடையாமல் மெக்ஸிகன் பெட்ரோலியம் கம்பனி ஊழியர்கள் உடனடியாக வாயு குழாயின் வால்வுகளை அடைத்துவிட்டனர்.

## பண்டத்தரிப்பு ஐ- நா. சங்கம்

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு ஐக்கிய நாணய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. ஆர். தம்பித்துரை தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் ஆர். தம்பித்துரை உபதலைவர் ச, நவரத்தினம் காரியதரிசி வி. குமாரசாமி உபகாரியதரிசி நா. மா, சந்தசாமி தனுதிகாரி எஸ். சைமன்நிர்வாக சபையினர் சி. செல்வத்துரை த. பொன்னையா,

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

கோட்டை, வியாழன்

பொருள்களைப் பதுக்கி வைத்து கொள்ளைலாபம் அடிக்கும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின தெரிவித்தார்.

பகிரங்க பொது லைசென்ஸ் அகற்றப்பட்டதற்காக உள்ளூர்ப் பொருட்களின் விலையைக் கூட்ட வேண்டும் என்ற அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# அம்மானில் இருந்து இருபடைகளும்வெளியேற்றம்

அம்மான், அக். 1

ஜோர்டானியத் தலைநகரான அம்மானில் இருந்து ஜோர்டான் அரசாங்கப் படைகளும், அரபுக் கொமாண்டோப் படைகளும் வாபஸாகிவருகின்றன. பெரும்பாலான கவச மோட்டார்களும், டாங்கிகளும் அவ்விடத்தை விட்டு வெளியேறுவதாகவும் மோட்டார் வாகனங்களில் வீரர்கள் கொண்டுசெல்லப் படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த வாபஸாகும் நடவடிக்கையைப் போர் ஒய்வுக்குழு கண்காணித்து வருகிறது.

அண்மையில் ஜோர்டான் மன்னர் ஹுசேனின் படைகளுக்கும், அரபுக்கொமாண்டோக்களுக்கும் இடையே நடைபெற்ற போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர அரபு நாடுகள் முயற்சி செய்து, கெய்ரோவில் காலஞ்சென்ற, ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி நாசரின் தலைமையில் அரபுக் கொமாண்டோத் தலைவர் திரு அரபாத்துக்கும், ஜோர்டான் மன்னர் ஹுசேனுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டது. அவ்வுடன்படிக்கை 14 அம்சங்களை உடையதாய் இருந்தது. அவ்வுடன்படிக்கையின் படியே இப்பொழுது போர் நடந்த பகுதிகளிலிருந்து இரு பகுதிப் படைகளும் வெளியேறுகின்றன.

## கோரிக்கைகள்

புலோலி, வியா

பருத்தித்துறை பொற்தொழிலாளர் சங்கத்தினர் பருத்தித்துறை எம்.பி. திரு கே, துரைரத்தினத்துக்கு தங்களின் குறைபாடுகளைக் குறிப்பிட்டு மகஜர் ஒன்றினை திரு. பொ. இராமச்சந்திரன் மூலம் சமர்ப்பித்தனர். மகஜரில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு.

ஒன்றரை அவுன்ஸுகளாக வழங்கிவந்த பவுனை 8அவுன்ஸுகளாம அதிகரிக்கவேண்டும்.

பவுண் பெர்மிட் உடனடியாக வழங்கவேண்டும்,

நமதுசமூக இளைஞர்களுக்கு சிறுதொழிற்சாலை அமைத்து வேலைவசதி செய்யவேண்டும்

நமது பகுதியில் ஓர் உபதபாற் கந்தோர் அமைத்தல்.

## கடன் வழங்க தடை என்ன?

அம்பன், வியா

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயக் கடன் கோரும் அங்கத்தவர் கமத்தொழிற் பகுதியினரால் மாதமொருமுறை, வருடம் நான்கு இதழ்களாக வெளியிடப்படும் 'கமத்தொழில் விளக்கம்' பெற வேண்டுமென நிர்ப்பந்திக்கப் படுகின்றனராம்;

வருட சாந்தா ரூபாஒன்று கட்டி அங்கத்தவராகியவர்களுக்கே கடன் கோரும் விண்ணப்பப் பத்திரத்தை விவசாய விரிவாக்க உணவு உற்பத்தி ஓவசியர் சிபார்சு செய்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் விளக்க சந்தாப் பணம் கட்டாத அங்கத்தவர்கள் கடன்பெற முடியாதாம். இத்தகைய கட்டுப் பாட்டின் காரணமாக இப் பகுதிகளில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு தேவையான காதத்தில் கடனை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன வென்று தெரிகிறது.

## பாம்புக்குப் பலியானேர்

முசலி, வியா

வன்னிப் பகுதியில் பாம்புக்குச் சிலர் பலியாகியுள்ளனரெனத் தெரியவருகின்றது.

செட்டிகுளத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரும், நேரியகுளத்தைச் சேர்ந்த 11 வயதுடைய ஒருவரும், தம்பனைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரும் பாம்புகளுக்கு அண்மையில் பலியாகினர்.

போக்குவரத்து

## குற்றங்கள் குறைந்துள்ளன

கோட்டை, வியாழன்

தற்போது நாட்டில் மோட்டார் போக்குவரத்துக் குற்றங்கள் குறைந்துள்ளன. போக்குவரத்துப் பொலிஸார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும்.

பொலிஸார், வீதிப் போக்குவரத்துக்களை கவனமாகப் கவனித்து மோட்டார் வாகனச் சொந்தக்காரர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாகச் செப்டம்பர் 19ந் திகதிக்கும், 24ந் திகதிக்குமிடையில் விபத்துக்களின் பதிவில் அதிக வித்தியாசம் காணப்படுகிறது, செப்டம்பர் 19ல் 552 குற்றங்கள் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. செப்டம்பர் 24ந் திகதி 131 குற்றங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

## 4 பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கோட்டை, வியாழன்

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சு நேற்று உள்நாட்டில் உற்பத்தியாகும் பெருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு விதித்துள்ளது.

இந்தப் புதிய கட்டுப்பாட்டுவிலைக்குள் அடங்கிய நான்கு பொருட்களாவன- பறபசை, குடைகள், பட்டரிகள். சைக்கிள் ரையர்களும், ரியூபுகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அகிம்சையுடன் இணைந்த சத்தியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் உலகையே உன் காலடியில் வணங்கச் செய்யலாம். — மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna: Telephone: 889.

சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 16-ந் திகதி (2-10-70)

## விலை குறைப்பு

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் நான்கு பொருள்களுக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளது. பற்பசை, குடைகள், பற்றறிகள், சைக்கிள் ரயர், ரியூப்கள் ஆகியவைகளே கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நான்கு பொருள்களுமாகும். புதிய கட்டுப்பாட்டு விலைகளுக்கும் இதுவரை விற்பனை செய்யப்பட்டுவந்த விலைகளுக்கும் பெருமளவில் வித்தியாசம் இல்லையாயினும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் இதர பொருள்களின் விலைகள் குறைவதற்கு இது வழிகாட்டியாக உதவக்கூடும்.

உள்நாட்டில் உள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான பொருள்களை நாமே உற்பத்திசெய்ய வேண்டுமென்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பல பொருள்களை இங்கேயே உற்பத்திசெய்ய முடியுமென்றும் நாம் இதற்கு முன் இதே பத்தியில் பலதடவைகளிலும் வலியுறுத்திவந்திருக்கிறோம்.

நமது தேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய முறையில் இங்கு பல்வேறு பொருள்களையும் உற்பத்திசெய்யக்கூடிய அளவில் மூலப்பொருள்களும் உழைப்புச் சக்தியும் நம் நாட்டிலிருக்கிறது. மூலப் பொருட்களையும் ஆள் பலத்தையும் சரியான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தத் தவறியதே இதுவரையும் உள்நாட்டில் உற்பத்தி பெருகாததற்குக் காரணமாகும்.

இங்கு உற்பத்திசெய்யப்படும் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளைவிட சில சமயங்களில் அதிகமாக இருப்பதையும் சில பொருள்கள் வெளிநாட்டுப்பொருள்களின் விலையில் மக்களுக்குக் கிடைக்கச்செய்வதற்கு மார்க்கம் இல்லாமலில்லை.

ஆடம்பரச் செலவுகளையும் வீண் விரயத்தையும் குறைத்து சரியான திட்டத்துடன் தொழில் நடைபெற வேண்டும். தொழில் அமைதி மற்றொரு முக்கிய அம்சம். குறைந்த ஆட்களுடன் கூடிய வேலை நடைபெறுவது உற்பத்திச் செலவை குறைக்க உதவும். உற்பத்திச் செலவு குறைவாக இருந்தால் அவற்றின் விற்பனை விலையும் குறைவாக இருக்கும்.


இப்போது இங்கு உற்பத்தி செய்யப்படும் பல பொருள்களின் உற்பத்திச்செலவு குறைவாக இருந்தாலும் வெளிநாட்டுப்பொருள்களின் விலைக்கு நிகராக இருந்தால் தான் அதன் தரமும் நல்லதென மக்கள் கருதுவார்களென்ற கருத்துக் காரணமாகவும் அதிக இலாபம் பெறவேண்டுமென்ற நோக்கத்தினாலும் அவை அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. உள்நாட்டுப் பொருள்களின் விலை அதிகமாக இருப்பதால் உள்நாட்டுப் பொருள்களை விட வெளிநாட்டுப்பொருள்களை வாங்குவதே நல்லதென மக்கள் நினைக்கிறார்கள்.

கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள நான்கு உள்நாட்டுப் பொருள்களைவிட வேறு பல உள்நாட்டுப் பொருள்களுக்கும் கட்டுப்பாட்டுவிலை விதிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. உள்நாட்டில் துணி உற்பத்தி அதிகரித்திருக்கிறது நல்ல ரகமான துணிகளும் உற்பத்திசெய்யப்படுகின்றன, ஆயினும் வெளிநாட்டுத் துணிகளின் விலையைவிட உள்நாட்டுத் துணிகளின் விலை அதிகமாக இருக்கிறது.

புதிய புதிய தொழில்களை ஆரம்பித்து உள்நாட்டில் உள்ள மூலப்பொருள்களைக் கொண்டு உள்நாட்டில் பல பொருள்களை உற்பத்திசெய்ய

# மனிதகுலம் ஒரு சிறந்த புத்தகம்

உள்ளத்திற்குக் கல்வியளிப்பது பற்றி ஒரே ஒரு வார்த்தை புத்தகங்களின் மூலம் இதைச் செய்யமுடியும் என்று நான் நம்பவில்லை ஆசிரியருடன் வைத்துக் கொள்ளும் உயிர்த்துடிப்புள்ள தொடர்பின் மூலம் தான் இது முடியும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலோ, மத்தியதரப் பள்ளிக்கூடங்களிலோ கூட உள்ள ஆசிரியர்கள் யார்? அவர்கள் நம்பிக்கையும் நல்லொழுக்கமும் உள்ளவர்களா? அவர்களே தமது உள்ளங்களுக்குக்கல்வி பெற்றவர்கள்தானா? அவர்களுடைய பொறுப்பில் விடப்பட்டுள்ள குழந்தைகளின் நிரந்தரமான அம்சத்தையும் அவர்கள் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்களா? ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களைச் சேர்க்கும் முறையே நல்லொழுக்கத்திற்கு ஒரு தடையாக இல்லையா? ஆசிரியர்கள் வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான சம்பளமாவது அவர்களுக்குக் கிடைக்கிறதா? தேசபக்திக்காக ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் வேலையில் சேரவில்லை என்பதும் நமக்குத் தெரியும் வேறு வேலை பெற முடியாதவர்கள்தான் இதற்கு வருகிறார்கள்



மகாத்மாகாந்தி

பாடும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் பிறரைப் பார்த்து அப்படியே நடந்து கொள்ளுவதை விட வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு சுதந்திரம் அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு கட்டுப்பாடும் பணிவும் இருந்தாக் வேண்டும் கட்டுப்பாடு தாழ்மையிலிருந்து தோன்றும் சுதந்திரத்தை மறுக்க முடியாது கட்டுப்பாடின்றி விருப்பப்படி நடப்பது மட்டரகதின் அறிகுறியாகும் அது தனக்கும் பக்கத்திலிருப்பவர்களுக்கும் கேடு விளைவிப்பதாகும்.

## சேவை செய்வதே கல்வியின் இறுதி நோக்கம்

### சுதந்திரமும் கட்டுப்பாடும்

மாணவர்கள் தாமே முன் வந்து காரியங்கள் செய்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அவர்கள் தாமே சிந்தித்துப் பார்க்கவும்செயலாற்றவும் தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும்; அதே சமயத்தில் முற்றிலும் கீழ்ப்படிதலும் கட்டுப்

### உள்ளத் தூய்மை

ஒரு நல்ல கல்விமுறையை வளர்ப்பதற்கு உள்ளத் தூய்மை இன்றியமையாத ஓர் அம்சமாகும். ஆயிரக் கணக்கான மாணவர்களை நான் சந்தித்திருக்கிறேன் அவர்களுடன் கடிதப்போக்கு வரத்துச் செய்திருக்கிறேன். அக்கடிதங்களில் அவர்கள் ஒளிவு மறைவே இல்லாமல் தமது உள்ளக் கிடக்கைகளை என்னிடம் கொட்டுகிறார்கள். இதிலிருந்து செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பது எனக்குப் புலனாகியிருக்கிறது நான் சொல்லுவதன் அர்த்தம் என்ன வென்பதை நீங்கள் எல்லோரும் நன்றாக அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன் மாணவன் என்ற ஆங்கில வார்த்தைக்குச் சமமான அருமைமயான வார்த்தையொன்று நமது மொழிகளில் இருக்கிறது. 'பிரம்மச்சாரி' என்பதே அந்தச்சொல் 'வித்தியார்த்தி' என்பது பின்னர் கண்டு பிடிக்கப்பட்ட சொல் ஆகும். பிரம்மச்சாரி என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். கடவுளைத் தேடி அலைபவன் மிகக்குறுகிய காலத்தில் கடவுளுக்கு மிகச் சமீபமாகப் போவதற்கு ஏற்ற முறையில் நடந்து கொள்பவன் என்பதே அந்த வார்த்தையின் அர்த்தமாகும். உலகத்திலுள்ள பெரிய மதங்களிடையே எந்தவிதமான வேற்றுமைகள் இருந்தாலும் ஒரு விஷயத்தில் வேறுபாடே இல்லை அதாவது உள்ளத்தூய்மை இல்லாத ஆணோ பெண்ணோ கடவுளின் தூய வெண்மையான சிங்காசனத்தின் முன்போய் நிற்பதென்பது சாத்தியமில்லை என்ற அடிப்படை உண்மையை எல்லா மதங்களும் ஒப்புகொள்ளுகின்றன நம்முடைய படிப்போ வேதவாக்கியங்களைத் திருப்பிச் சொல்லுவதோ சமஸ்கிருதம் லத்தீன் அல்லது கிரேக்க மொழிகளை நன்கு படித்திருப்பதோ உள்ளத்தூய்மை பெறுவதற்கு நமக்கு உதவி செய்யவில்லையானால் அவற்றினால் எந்தவிதமான பலனும் இல்லை நல்லொழுக்கத்தை வளர்ப்பதே அறிவின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

### சேவை

இப்போதுள்ள நமதுகல்வி முறையில் இலக்கியத்திறனுக்கு மட்டுமே பிரத்தியேகமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெரியகுறைபாட்டை சர் விசுபுவசுரய்யா தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். அத்துடன் நான் இன்னும் ஒருபெரிய குறையையுமஎடுத்துக்காட்ட விரும்புகிறேன் படித்துக்கொண்டிருக்கும் காலத்தில் படிப்பை பாதிக்கக்கூடிய சிறிய தொண்டுகளைக்கூடத்தாம் செய்யக்கூடாது என்று மாணவர்கள் நினைக்கும்படி செய்கிறார்கள் குஜராத்தில் சில மாணவர்கள் செய்துகொண்டிருப்பதைப்போல், தம்முடைய இலக்கியக் கல்வியையோ, தொழிற்பயிற்சியையோ நிறுத்திவைத்துவிட்டு மாணவர்கள் நிவாரண வேலையில் ஈடுபட்டால் அதனால் அவர்களுக்கு லாபமேயொழிய நஷ்டம் ஒன்றுமில்லை சேவை செய்வதே கல்வியின் இறுதி நோக்கமாக இருக்கவேண்டும்.

### ஒருமைப்பாடு

உங்களிடமே உள்ள சிறந்த அம்சங்களை வெளிக்கொணருவதுதான் உண்மையான கல்வியாகும்' மனிதகுலம் என்ற புத்தகத்தைவிடச் சிறந்த புத்தகம் வேறுஎன்ன இருக்கமுடியும்? அல்லும் பகலும் ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றுஅவர்கள் ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியுடன் சேவைசெய்வதைவிடச் சிறந்த கல்வி வேறு என்னஇருக்கமுடியும்? இதுநம்மை உயர்த்தும் ஓர் ஆராய்ச்சியாக இருக்கும் என்னுடைய கொள்கை குறுகிய ஒன்றல்ல. மனிதர்களாகப் பிறந்தவர்கள் யாவரும் சகோதரர்களே என்ற உண்மையை நடைமுறையில் கொண்டு வருவதே என்னுடைய நோக்கமாகும்.

## காந்தியும் வள்ளுவரும் உலகின் இரு கண்கள்

வள்ளுவர் வகுத்தருளிய ...ர்ச்சி பெற்றார். தேர்ந்த ... யாது. நெடுநாள் அலைந்து ... வடுவனவாம். கறுப்பர் ... நெடுந்தொலைவில் ... சைவ என்ற காரணத்தால் ...டி

"அரசாங்க-உள்ளூராட்சி

## தொழிலாளரிடையே வேற்றுமை நீக்கப்படும்

### தூதுகோஷ்டியிடம் பதில் நீதிமந்திரி

கோட்டை, வியாழன் இலங்கை ஹரிஜன யூனியன் தூதுகோஷ்டி கடந்த 24-9-70-ல் பதில் நிதியமைச்சர் திரு. பேர்னுட் சொய்ஸாவை நேரில் சந்தித்து நாட்டைக் காக்கும் நிதிக்கு 550 ரூபாவை அவரிடம் கையளித்தது; மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தது.

'தற்போது அரசாங்க, கார்ப்பரேஷன், தனியார் துறை ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பள உயர்வு அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதை நாம் வரவேற்கும் அதேவேளையில் வாழ்க்கைச் செலவுப் பளுவால் நெடுங்காலமாகக் கஷ்டமுறும் உள்ளூராட்சி மன்றத் தொழிலாளருக்கும் சம்பள உயர்வளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்' என மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

'அரசாங்க இலாகாக்கள், கார்ப்பரேஷன்களில் ஐந்து வருடங்கட்கு மேலாகச் சேவை செய்யும் 20 000 தொழிலாளருக்கு மாதச் சம்பளத்துடன் சேவை நிரந்தரமளிக்கப்படவிருப்பதை வரவேற்பதுடன், இதே தகுதியுடைய உள்ளூராட்சி மன்றத் தொழிலாளருக்கும் இவ்வந்தஸ்தை அளிக்கும் படியாகக் கேட்டுக்கொள்கின்றோம். இது பற்றி பொதுநிர்வாகஉள்ளூராட்சி உள்நாட்டமைச்சருடன் எமது யூனியன் ஏற்கனவே தொடர்புகொண்டுள்ளது. இக்கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படுமென அவரது அமைச்சு எமக்கு எழுத்து மூலம் உறுதியளித்துள்ளதால் தங்களின் மேலான கவனத்தையும் வேண்டுகின்றோம்' எனவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்கள் கோரிக்கைகளின் தேவைகளும் சட்டபூர்வமானவை ஆகையால் அரசாங்கத் தொழிலாளர் அனுபவிக்கும் உரிமைகளும் சலுகைகளும் உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர்களும் விரைவில் பெறுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வருகிறதென்று திரு பேர்னுட் சொய்சா தூதுக்குழுவிடம் கூறினார்.

## நைல் நதியின் . . .

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

லான கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. இது நாசரால் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்ட மசூதிக்குப் பக்கத்தில் உள்ளது.

இறுதி ஊர்வலம் சென்ற 6 மைல் நீளமான சாலைகளில் இருந்துவந்த சினிமாப் படங்கள் எல்லாம் நீக்கப்பட்டு மிகப் பெரிய நாசரின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சோவியத் யூனியன் பிரதமர் கொஸிஜின் கெய்ரோ வந்து சேர்ந்ததும் திருமதி நாசரைச் சந்தித்து, துக்கம் விசாரித்தார். தற்காலிக ஜனாதிபதி அன்வார் சதக்கையும் சந்தித்து சோவியத் தன் உதவியைத் தொடர்ந்தும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குத் செய்துவருமென உறுதியளித்தார்.

### இறுதி ஊர்வலம்

கெஸபா தீவிலிருந்து பூதவுடலை பீரங்கி வண்டி தாங்கிச் சென்றது. 6 மைல்வீதி இரு மருங்கிலும் முப்படை

நாசரின்' மறைவுக்கு பாகிஸ்தானில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது அவரது இறுதி யாத்திரை இடம் பெற்ற இன்று அரசாங்க அலுவலகங்கள் தனியார்துறை அலுவலகங்கள் யாவற்றிற்கும் விடுமுறை விடப்பட்டது. கடைகள் பொது நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன பாகிஸ்தான் செய்தி இதழ்கள் நாசரின் வாழ்க்கை வரலாற்றையும் அரபு மக்களுக்கு அவர் செய்த சேவையையும் சிறப்பாக வெளியிட்டன. அப்துல் நாசரின் சாந்திக்காக மசூதிகளில் தொழுகைநடைபெற்றது பாகிஸ்தான் அரசாங்கக் கட்டிடங்களில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறந்தன. இன்றைய நாள் துக்க நாளாகக் கொண்டாடப் பட்டது.

... ...

### மின்சாரத்துக்கு குரங்குகள் பலியாகின்றன

மட்டுவில், வியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளைவிட சில சமயங்களில் அதிகமாக இருப்பதையும் சில பொருள்கள் வெளிநாட்டுப்பொருள்களின் தரத்தைவிட வெகுவாகக் குறைந்திருப்பதையும் காண முடிகிறது. இதேசமயம் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பல பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களைவிட தரத்தில் உயர்ந்தவையாக இருப்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். தரத்தில் உயர்ந்த பொருள்களை குறைந்த

துணிகளின் விலை அதிகமாக இருக்கிறது.

புதிய புதிய தொழில்களை ஆரம்பித்து உள்நாட்டில் உள்ள மூலப்பொருள்களைக் கொண்டு உள்நாட்டில் பல பொருள்களை உற்பத்திசெய்ய முன்வரவேண்டிய அதே சமயம் உற்பத்திச்செலவைக் குறைத்து குறைந்த விலையில் சிறந்த பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்யவும்வேண்டும். உள்நாட்டுப்பொருள்களின் உற்பத்திச் செலவைக் கணித்து அவற்றுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பது தவறாகாது.

## திவ்வியஜீவனசங்க நவராத்திரிவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம்திவ்யஜீவன சங்கம் நடத்தும் நவராத்திரி விழா இன்றைய நிகழ்ச்சி: இசைவிருந்து சங்கீத பூசணம் ஆ சோமசுந்தரம் சொற்பொழிவு வடபிராந்திய கல்வியதிபதி திரு வீ சங்கரலிங்கம் (கு வி ம

......

உடுவில், வியாழன்

ஒன்பது நாட்களும் உடுவில் இளைஞர் வர்த்தகக் கலைமன்ற மாணவர்கள் நவராத்திரி விழா கொண்டாடுகின்றனர்.

பேச்சுக்கள், பிரசங்கங்கள், பஜனை இன்னிசை ஆகியவை தினமும் விழாவில் இடம்பெறும்

## ஆண்டுவிழாவும் நவராத்திரியும்

யாழ்ம்பாணம், வெள்ளி

திருநெல்வேலி சைவ முன்னேற்றக் கழக இரண்டாவது ஆண்டுவிழாவும் நவராத்திரி விழாவும் யாழ்ப்பாணம் பரமேஸ்வரச் சந்தி விநாயகர் முன்றலில் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பிற்பகல் 5-30 மணிக்கு நாவலர் அரங்கில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகளில் திவ்வியஜீவன சங்கம் சைவமுன்னேற்றக் கழகம், கந்தர்மடம்பஜனைக் குழு ஆகியவற்றின் பண்ணிசை இடம் பெறும்.

வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமை வகிப்பார். திருநெல்வேலி நந்தி இசை மன்ற மாணவர்களினது மிருதங்க இசையும் லிங்கம் சகோதரர்களின் இன்னிசை விருந்தும் இடம் பெறும். (கு வி ம)


## விளம்பரம்

பின்வரும் இடங்களிலும் 'ஈழநாடு' பத்திரிகை கிடைக்குமென்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

திரு. ஆர். எஸ். கணேசன்,
**கணேசன் ஸ்ரோர்ஸ்,**
13, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

**இராசேஸ்வரி ஸ்ரோர்ஸ்,**
63, புத்தளம் றேட்,
சிலாபம்.

திரு. ஏ. அமிர்தலிங்கம்,
**லிங்கம் ஸ்ரோர்ஸ்,**
பிரதான வீதி,
ஏறாவூர்.

2480



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# உலகின் இரு கண்கள்

வள்ளுவர் வகுத்தருளிய உலகப் பொதுமறையின்படி நம் தவப் பேற்றால் நாம் காணவும் கேட்கவும் வாழ்ந்து காட்டிய 'வாய்மை திறம்பாத் தூய்மையாவர்' மகாத்துமா காந்தியடிகளாராவர். அவர் தம் தூய வாழ்க்கை அனைத்துலக மக்கட்கும் நினைப்பை விட்டு அகலாது நீடு நிற்பதற்கமைந்த தனிப்பெரும் சிறப்புவாய்ந்த எடுத்துக்காட்டாகும்,

காந்தியடிகள் ஏழு வயது வரை போர்பந்தர் இராஜகோட்டைகளில் கல்வி கற்றனர். 'மெட்ரிக்குலேசன்' வகுப்பில் தேறுவதற்கு முன் அவருக்குத் திருமணம் ஆயிற்று. திருமணம் நடக்கும்போது நம் அடிகளாருக்கு அகவை பதின்மூன்று. அடிகளாரின் பதினைந்தாவது அகவையில் அவர் தம் அருமைத் தந்தையார் உயிர் நீத்தனர். 1887இல் அடிகள் மெட்ரிக்குலேசன் வகுப்பில் [தே]ர்ச்சி பெற்றார். தேர்ந்ததும் தாயார் தம் அருமை மகனாரை மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பினார். அனுப்பும்போது தாயார் தம் மகனாரிடம் சூளுறவு எனப்படும் சொல்லுறுதி பெற்றனர். அவை வருமாறு: (அ) புலாலுண்டல் கூடாது, (ஆ) எப் பெண்ணிடமும் காதல் கொள்ளக் கூடாது, (இ) கள்ளுண்டல் ஆகாது என்பனவாம்.

இஃது 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி, எல்லா உயிரும் தொழும்', எனவும் இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திரு நீக்கப் பட்டார் தொடர்பு எனவும் நல் வாழ்க்கைக்கு நம் நாயனார் வகுத்தருளிய நன் முறைகளையே அவ்வம்மையாரும் கேட்டுக் கொண்டனர். அடிகளாரும் அங்ஙனமே உறுதிமொழிந்தனர். இங்கிலாந்தில் சைவ உணவு விடுதியே கிடையாது. நெடுநாள் அலைந்து நெடுந்தொலைவில் ஒ[ரு] சைவ உணவு விடுதியைக் கண்டனர். பேரின்பமுற்றனர். உணவு உண்டனர். பின் தாமே சமைத்துண்டனர். பின்பு சைவ உணவின் சிறப்பையும், புலாலுணவின் குற்றத்தையும் பல நூல்களின் வாயிலாக நன்குணர்ந்து கொண்டனர். உணர்ந்த பின் தாயார்பால் தாம் அளித்த உறுதிமொழிக்காக மட்டுமன்றி அதனைச் சிறந்த கொள்கையாகவும் கடைப்பிடித்தொழுகி வந்தனர். கொள்கையெனினும் சமயம், நெறி, மதம் என்பனவாகக் கூறினும் ஒன்றே. இம் முறையான் அடிகள் சைவரெனவுங் கொள்ளப்படுவர்.

இலண்டனில் அடிகள் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்ற பின் 1891 ஆம் ஆண்டு பம்பாய்க்குத் திரும்பினர். அவர் தம் அன்னையார் முன்னமே உயிர்நீத்ததுணர்ந்தனர். 1893 இல் அடிகள் ஒரு வழக்கில் துணை புரிதற் பொருட்டுத் தென்னாபிரிக்கா சென்றனர். அடிகற் டர்பன் வழக்கு மன்றதில் தம் தலைப்பாகையைக் கழற்றும்படி நடுவர் கூறிய நேர்மையற்ற கட்டளைக்குஇணங்காமல் மன்றத்தைவிட்டு வெளியேறினர். இந்நிலைமை திருவள்ளுவ நாயனார் அருளிய அருளறமுறைமைகளை உலகுக்கு இது வலியுறுத்துவதாகும். அவை வருமாறு 'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்தம், நிலையின் இழிந்தக் கடை' எனவும் 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்' எனவும் வருவனவாம். கறுப்பர் என்ற காரணத்தால் அடிகளும் அங்கு வாழும் கறுப்பர்களும் அளவிறந்த இன்னல்கள் அடைந்தனர் தென்னாபிரிக்க இந்தியர்களின் உரிமைக்காக அரசினரை எதிர்த்து அறப்போர்தொடங்கினர். அறப்போர் சத்தியாக்கிரகம். வெள்ளையரின் நிறத் திமிரை ஒடுக்கமுயன்றனர். இதனால் ஏழுதடவை சிறை புகுந்தனர். இறுதியில் வெற்றியுங் கண்டனர்.

ஒருமுறை டர்பனில் காந்தியடிகளை வெள்ளையர்கள் அளவிறந்த கொடுமை செய்தனர். அவர் தம் உயிருக்கே பேரிட நேரும்போல் இருந்தது ஊர்காவற் கண்காணிப்பாளரின் மனைவியார் நடுவே புகுந்து வெறியர்களை விலக்கிக் காத்தார். காந்தியடிகள் இந்திய ஊர்காவற்காரன்போல் கோலம்பூண்டு தப்பினார். இதனை அறிந்த பிரிட்டிஷ் அமைச்சர் சேம்பர்லேன் தக்க நடவடிக்கை எடுக்கும்படி நேட்டால் அரசாங்கத்துக்குத் தந்தியடித்தனர். அடிகள் அவர்களைக் கண்டிப்பதற்கு இணங்கவில்லை. இது 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு' எனவும் 'ஒறுத்தார்க் கொரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்' எனவும் வரும் நாயனார் நற்றமிழ்மறைக்கோர் எடுத்துக்காட்டாகும்,

நம் இந்தியப் பெருநாட்டிற்கு உரிமை வாங்கித் தந்த பேரருளாளர். இந்தியத் தந்தை இது: 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி, இன்பம் பயக்கும் வினை' எனவரும் தமிழ் மறையின் எடுத்துக்காட்டாகும். முடிவாக இறுதியை உண்டாக்கியவனை மன்னித்து விடும்படி மொழிந்தனர் என்றார். அடிகளாரின் ஒப்பற்ற பெருநிலையினை என்னென்று கூறுவது?

அடிகளார் 'அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால் பூன்றிய தூண்' என அமைந்த திருக்குறளின் பிழம்பாவர். பிழம்பு வடிவம், 'உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன்.' எனும் மறையின் இனித்த பண்பினர். இவ்விரு பெருமக்களும் உலகோர்க்கு இருகண்ணனைப்பர்.

(செந்தமிழ்ச் செல்வி ஆவணி 1969)

## "காந்தி புகழ்க் கீதம்"

பல்லவி

அன்பு மஹாத்மா அஹிம்சை மஹாத்மா
உண்மை மஹாத்மா உயர்ந்த மஹாத்மா - (அன்பு)

அநுபல்லவி

இந்தியாவிலே பிறந்த சிந்தனையாளன்
எங்குமே சிறக்கநெறி தந்த நற்சீலன் - (அன்பு)

சரணம்

அறப்போர்தனின் சிறப்பை உலகில் அறியச்
செய்தவன்
இறப்பேவரினும்மதனைக் கைவிடாதவன்
மறப்போரினார் வலிமை கண்டும் அஞ்சிடாதவன்
குறிப்போடுயர் கொண்டகொள்கை நின்று
காத்தவன்-(அன்பு)
விடுதலைப்போர் முன்னணியில் உயிரதானவன்
விழுமியநற் சுதந்திரத்தின் தந்தையானவன்
அடைந்தநல் சுதந்திரத்தை ஆள வைத்தவன்
அகலநின்று சமநிலையைக் காத்த உத்தமன் (அன்பு)

—அரியாலையூர் வே. ஐயாத்துரை.

## நாடெங்கும் சிலை வேணும்

உலகம்தந்த உத்தமருள்ளே உயர்ந்தவர் உத்தமர் மகான் காந்தி
நிலவும் புகழை நிலையாய்க்கண்ட நித்தியர் சத்திய நெறிக்காந்தி
உலவு பொருள் குலவுஞ்சுகமும் உதவா சத்திய நெறி ஒன்றே
பலவும் அதுவே பயனும் தருமே பயின்றவர் பண்புரை அது என்றார்.

சாதிகள் என்றும் சழுக்குகள் என்றும் சாத்திரம் சொல்வதிற் சாரமில்லை
ஆதியில் இரண்டு சாதிகள் உண்டு அடுத்தவை வந்தவர் வகுத்ததுண்டு
பாதியில் வந்ததைப் படுகுழிக்காக்கல் பகுத்தறி வாண்மையு மழகுமென்றார்
சேதியை விடுத்துச் செய்வதைத்திருத்திச் செகத்தினில் நன்றே வாழ்வ
மென்றார்.

கத்தியும் வேண்டாம் இரத்தமும் வேண்டாம் சத்தியம் இருக்கு அதுபோதும்
நித்திய விரதம் சத்தியம் புரதம் அகிம்சையே தான் ஒருபத்தியமாம்
சத்திய ராமன் தசரதராமன் நித்தியராம பஜனை உண்டு
எத்திய வலியும் ஏத்தியவலியும் எங்கும் எதிலும் உண்டென்றார்.

காந்திக்கு நாடெங்கும் சிலைவேணும் கவின் பெறும் அழகினைத்தொழவேணும்
சாந்திக்கு அவன்புகழ் சொலவேணும் சத்திய வழிதனிற் செலவேணும்.

—மேலைப்புலோலி, மு. க. கதிர்காமத்தம்பி

உறுதியளித்தார்.

### இறுதி ஊர்வலம்

கெஸபா தீவிலிருந்து பூதவுடலை பீரங்கி வண்டி தாங்கிச் சென்றது. 6 மைல்வீதி இரு மருங்கிலும் முப்படை வீரர்களும் அணிவகுத்து நின்றனர். மக்கள் கதறி அழுதனர். யுத்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் முன்னே அணிவகுத்து செல்ல அதைத் தொடர்ந்து பல்வேறு படைகளையும் சேர்ந்த வீரர்கள் சென்றனர். எகிப்திய இராணுவ வாத்தியக் கோஷ்டி தொடர்ந்து சென்றது. இவர்களைத் தொடர்ந்து பொலிஸ் அணி அணிவகுத்துச் சென்றது. இதன் பின்னே சூடான் இராணுவத்தினரும் அதன் பின்னே லிபியா நாட்டு இராணுவத்தினரும் சென்றனர்,

படை வீரர்களுக்குப் பின்னே வாகனங்கள் சென்றன. இதற்குப் பின் ஜனாதிபதி அப்துல் நாசரின் பூத உடலைத் தாங்கிய பீரங்கி வண்டி வந்த கொண்டிருந்தது. நாசரின் சடலம் சென்ற வழி முழுவதும் மலர்கள் தூவப்பட்டன. நாசரின் ஜனசாவைத் தொடர்ந்து இராணுவ வீரர்களும் அவர்களுககுப் பின்னே உலகில் இருந்து வந்து பிற நாட்டுத் தலைவர்களும் குழுக்களும் சென்று கொண்டிருந்தனர்.

தெருக்கள் இருமருங்கிலும் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடிநின்று ஜனஸாவை வழியனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அழுது புலம்பிய காட்சி வெளிநாட்டிலிருந்து வந்தவர்களையெல்லாம் சோகத்தில் ஆழ்த்தியது.

### இந்தியாவில் துக்கம்

புதுடில்லி, அக். 1

இந்திய அரசாங்கம் ஐ. அ. குடியரசு ஜனாதிபதியின் இறுதி யாத்திரையை ஒட்டி இன்று பொது விடுமுறையாக அறிவித்தது.

மத்திய அரசு அலுவலகங்கள் ராஜ்ய அரசாங்க அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. இந்திய தேசியக் கொடி சகல அரசாங்கக் கட்டிடங்களிலும் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. பொதுவர்த்தக விடுமுறையாக இன்று பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் தபால் தந்தி இலாகா மட்டும் தம்வழமையான சேவையைச் செய்தன.

### பாகிஸ்தானில் விடுமுறை

கராச்சி, அக். 1

ஐ. அ. குடியரசுஜனாதிபதி ஜனாப் கமால் அப்துல்

டப் பட்டது.

### மின்சாரத்துக்கு குரங்குகள் பலியாகின்றன

மட்டுவில், வியா

பனம்பழம் தின்று கொண்டு மின்சாரக் கம்பத்தில் விளையாடும் குரங்குகள் தினமும் இரண்டுக்குமேல் மட்டுவில் பகுதியில் இறக்கின்றன.

நுணாவில், சரசாலை வீதியில் மட்டுவில் கிராமசபையால் கொண்டு வரப்பட்ட மின்சாரத் திட்டம், ஆயுர் வேத டாக்டர் பி. பிலிப்ஸ் மருத்துவ மனைக்கு நீட்டப்பட்ட மின்சாரத் தொடர் பனை நிறைந்த தோப்பூடாகவே செல்கின்றது. காலை, மாலை பனந் தோப்பில் பனம்பழம் தின்றபடி துள்ளிக் குதித்து குட்டிகளுடன் விளையாடும் பெரிய குரங்குகளும் மின்சாரக் கம்பத்தில் ஏறி விளையாடுகின்றன. இதன் பயனாக தினமும் குரங்குகள் இறந்து கொண்டிருக்கின்றன.

சில மின்சாரத் தாக்குதலினால் உடனே இறந்து விடுகின்றன. சில குற்றுயிராகக் கிடந்து துடித்துத் துடித்தே உயிர் விடுகின்றன. இறந்த குரங்குகளுக்கு அருகாமையில் மாபெரும் குரங்குக் கூட்டமே திரண்டு விடுகின்றது. இதனால் வீதியால்வரும் மாணவரும், சிறுவர்களும் அச்சமும் பீதியுமடைகிறார்கள்.

......

### யாழ். விஜயம்

யாழ்ப்பாணம் வெள்ளி

பதில் நிதிமந்திரி பேர்னட் சொய்சா இன்று யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டு இங்குவருகிறார், மாலை 8-10 மணிக்கு விமானமூலம் வரும் இவர் 4ந் திகதிவரை தங்கியிருப்பார்.

மானிப்பாயில் தங்கிநிற்க விருக்கும் திரு பேர்னட்சொய்சா 4ந் திகதி மாலை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கும் சமசமாஜ வாலிபர்சங்ககூட்டத்தில்கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்துவார். அன்று கல்லியங்காட்டில் ல. ச. ச. கட்சிக்கிளை ஒன்றை திறந்துவைப்பார். திரு என் கே. தர்மலிங்கம் தலைமையில் இத்திறப்புவிழா நிகழும்.

......

மாவிட்டபுரம், வியா

பருத்தித்துறையைச் சேர்ந்த எம். மரியதாசின் வீட்டில் நடைபெற்ற களவு சம்பந்தமாக மாதம்பையைச் சேர்ந்த பி. எல். பெர்னாண்டோ என்பவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் தேடி வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org